அகஸ்திய மஹா முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

பிரம்ம தத்பசோர்வையைச்சார்ந்த

# இடைபாகம்

# நானூறு

(முதல் பாகம்)

இந்த
ஏட்டுப்பிரதியினின்று
பாலூர் ராமசாமி முதலியார் அவர்களால்
மொழி பெயர்த்தெழுதப்பட்டு

தாசர்புரம், திருநின்றையூர்
H. தேவதாஸ் B. A., L. T., அவர்களால்
தாசர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.
1936-ம் வரு ஆகஸ்டு மீ

*All Rights Reserved.*

பதினெண் சித்தர்கள்
திருவாய் மலர்ந்தருளிய

# அந்தரங்க தீக்ஷாவிதி 500

அச்சிட்டு வெளி வருகிறது.
மூப்பு மார்க்கம், பிரம்மகற்பம், பஸ்ப, செந்தூரம், சுன்ன முறைகள் பரிபாஷையின்றி விளங்கும்.

---

# கிராம ஆசிரியன்

**ஆசிரியர்களுக்கென்றும், கிராமவாசிகளுக்கென்றும்** வெளியாகும் மாதப் பத்திரிகை இது ஒன்றுதான். சகல உள்நாட்டு, வெளிநாட்டுச் சமாச்சாரங்களும், ஆசிரியர்களுக்கு அனுகூலமாகக்கூடிய பல அரிய விஷயங்களும், மற்றும் பயனளிக்கக்கூடிய வைத்தியப்பகுதிகளும், கட்டுரைகளும் நிறைந்து, மாதந்தோறுந் தவறாமல் வெளி வந்து உங்கள் மனதைக் குதூகலிக்கச் செய்யும். இதை யாவரும் எளிதில் வாங்கி பயனடையுமாறு சந்தா பணம் மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| உள் நாடுகளுக்கு | வருட சந்தா | ரூ. 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | ,, | ரூ. 1—8—0 |

கிராம ஆசிரியன் ஆபீஸ்,
**தாசர்புரம், தின்னனூர் R. S.**

அகஸ்திய மஹா முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

பிரம்ம கற்பகோர்வையைச்சார்ந்த

# இடைபாகம்

# நானூறு

(முதல் பாகம்.)

இஃது
எட்டுப்பிரதியினின்று
பாலூர் ராமசாமி முதலியார் அவர்களால்
மொழி பெயர்த்தெழுதப்பட்டு

காசர்புரம், திருநின்றையூர்
H. தேவதாஸ் B. A., L. T., அவர்களால்
தமது அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.
1936-ம் ௵ ஆகஸ்டு ௴

*All Rights Reserved.*

# முகவுரை.

சித்தர், ரிஷிகள், முனிவர்கள் இவர்களில் குரு முனிவராகிய அகஸ்தியமாகமுனிவர் அருளிய பரிபாஷை 500-ல் காட்டியிருக்கும் பிரம்மகற்பத்தைச் சார்ந்த 'இடபாகம் நானூறு' எனும் முக்கிய நூலானது இது பரியந்தம் வெளிவராமல் இருந்தபடியால் அநேகர் அண்டமென்றும், பிரண்டமென்றும், கல்லுப்பென்றும், பிட்டகற்பமென்றும், வன்னியென்றும், கோஜபீஜமென்றும், அண்டோடு என்றும், ரவிமதியென்றும், நாதவிந்தென்றும், புளி அமுரியென்றும் பெயர்களை மாற்றி மாற்றிக் கூறுவதால், ஜனங்களுக்கு தெளிவாகும் பொருட்டு இந்த சாஸ்திரத்தை வெளியிட்டு, உத்தம ஞானியாயிருக்கிறவர்களுக்கு அறிவு விளங்கி ஒழுகுமாற, இதையெடுத்துக் காட்டும்படி அநேகர் வேண்டுகோளுக்கிணங்கி முன் வந்தோம். இதைக்கொண்டு வாதிகளும், வைத்தியர்களும் எளிதில் ஔஷத முதலியவைகளை சுலபமாக முடிக்கலாமென நினைக்கின்றோம்.

மேலும், பிரம்மகற்பத்தைக்கொண்டு முடிக்கவேண்டிய சூதமணியும், மற்றுமுள்ள கன ஔஷதங்களுக்கும் ஆதாரமாயுள்ள முறைகளை இந்த இடபாகத்தைக்கொண்டு கூறுகிற வழியில் செல்லக்கூடிய மார்க்கங்களையும் இதில் காணலாம்.

மேற்படி இடபாகம் நானூறில் முதல் பாகத்தில் 18 செய்யுட்களை வெளியிட்டிருக்கிறோம். மிகுதி செய்யுட்களை இரண்டாம் பாகமாக சீக்கிரத்தில் அச்சிட்டு வெளியிடப்படும்.

பாலூர்—ராமசாமி முதலியார்
H. தேவதாஸ்.

# முதல் பாகம்.

ஒளியான சுழிமுனையிலே ஒடுங்கி நின்று
உத்தமியாள் பதம்போற்றி யோகத்தேகி
வளியான துறையறிந்து அண்டங்கண்ணில்
மகத்தான அண்டவரை முடிமேல் சென்று
தெளிவான ஓங்கார வடிவுகொண்டு
தெளிந்தமனம் தன்றனிலே தன்னைக்கண்டு
வெளியானபர வெளியே வாசமான
வேதாந்த சித்தாந்தத்தாதி காப்பே.

ஆதியிலே பராபரத்தில் பிறந்த சத்தி
அருவுருவாய் நின்று பரசிவனுமாகி
சோதியென்ற சிவனிடமாய் சத்தியாகி
தொல்லுலகில் எழுவகையின் தோற்றமாகி
நீதியென்ற அறிவதனால் தானாய் நின்று
நிறைந்த பரிபூரணமாய் நிஷ்களமாகி
சாதியென்ற சத்திசிவம் அருள்தன்னாலே
சச்சிதானந்த வெளிதெளிந்த காப்பே.

தெளிந்த பரிபாஷையெல்லாம் திரட்டிக்கொண்டு
செப்புகிறேன் நானூற்றில் சொல்லக்கேளு
களிந்தமும் மடைகற்றி நின்றநாதன்
காரணனே இடபாகத்தை கருத்தாய்க்கேளே
குளிர்ந்த மனமுடையோர்க்கு சொன்னமார்க்கம்
கொடிய தொரு துஷ்டருக்குச் சொல்லவில்லை
துளிர்ந்தொரு சிவகுருவையென்று சொல்லி
தாரணியில் யுரைக்கடுத்த நிலத்தைப்பார்.

பாரப்பா பூமியிலே அநேகதேசம்
பண்பான நேபாளம் காஸ்மீரந்தான்

சீரப்பா அதின் வடக்கு கல்லாருண்டு
சோதிப்பார் பதினாறு தலந்தானுண்டு
கூரப்பா அதின் கிழக்கு பிரமதேசம்
கோமுட்டி வளையலவன் செய்வான் பாரு
நேரப்பா அதின் வடக்கு சீனந்தானே
சீனர்கள் சவுக்காரம் செய்வார்காணே.

5. காணப்பா மலைசார்பு தன்னில்காணு
கனமான வுவர்பூக்கள் பூர்க்கும்பாரு
தேனப்பா வளையல்களையதிலே செய்வா
சிறப்பான பீங்கான்கள் செய்வார்பாரு
சீனப்பா அதின் கிழக்கு யாப்பான்தேசம்
சிறப்பான கண்ணாடி அதிலே செய்வார்
தூணப்பா தூரும் பாகும் தூரும்பு தூணும்
துரியாதீதங்கடந்த சோதியாகும்.

6. சோதிவெளி விளங்குகின்ற பூமி நாதம்
சொற்பெரிய சிவனுமையும் வாழ்ந்திருப்பார்
வாதியென்ற பேர்களெல்லாம் வருவார் கோடி
மகாமுனிவர் ரிஷிகள் சித்தர்வாசம் செய்வார்
ஆதியென்ற கெடு காளைக்குட்டியார் கோவில்
வருகாத வழிக்கப்பால் அத்தலந்தான் ஒன்று
நீதியாய் சிவனுமையும் வாசஞ் செய்வார்
நேராகா துறைமுகந்தான் பிராஞ்சுகாணே.

7. காணவே வங்காள நாட்டில் தானும்
காசியென்றும் அயோத்தியென்றும் சீறுமென்று
தோணவே அவ்விடத்தில் பூமிநாதம்
தேவியென்றும் ஈசனென்றும் செப்பலாகும்
ஊணவே அதின்தெற்கு தலந்தானொன்று
உறவான ஜெயபுரி செம்பார் ஒன்று
சேணவே வேடுவர்கள் குடியிருப்பு
இடமாக வாழ்ந்திருப்பார் சிவனுமாமே.

8. ஆமப்பா அதின் மேற்கு தலந்தான் ஒன்று
அழகான திருப்பதி மலைதான் எழு
போமப்பா அதின் மேற்கு பதிங் காதத்துள்
ஒளிவான வழலையது விளையும்பூமி
சாமப்பா அவ்விடத்தில் அரனுமையுந்தான்
சார்ந்திருப்பார் அதின்தெற்கு சோழதேசம்
வேமப்பா ஸ்ரீரங்கம் வடமேல்மூலை
வீரான தலமொன்று விளையும்பூவே.

9. பூவான பாண்டியனார் தேசம் தன்னில்
புகழ்பெரிய நல்லதொரு தலந்தானொன்று
பாவான கன்னியாகுமரியென்றும்
பரிவான தலந்தானும் நாலைந்துண்டு
ஆவான பொதிகை மலை சார்புதன்னில்
அழகான உவர்க்காடு விளையும் பூமி
நாவான மதியுப்பு ரவியினுப்பு
நயமாகக் காணலாம் அநேகந்தானே.

10. தானென்ற தேசத்தில் பூமி நாதம்
தானெடுப்பார் சித்தர் பானைக்காண்பார்
கோனென்ற பூவழலை பேரேதென்னில்
குணமான பூ நிறமே வெள்ளையாகும்
வேனென்ற மீனத்தில் கதிர்போல்பூத்து
விளையுமடா ரவிவித்து மதியின் வித்து
மோனமென்ற வழலை யென்றும் முப்பூ என்றும்
முடிவான அண்ட பிண்டமென்றும் பேரே.

11. போரான உவரென்றும் வண்ணனென்றும்
பீசமென்றும் கோசமென்றும் மூலமென்றும்
கூரான புளியென்றும் வைரமென்றும்
கூர்மையுள்ள சுத்தகெங்கை தணைப்பெற்ற ரூபி
வாரான இடிமின்னல் கௌரி ரெங்கு
வளமான வெள்ளைக்கல் பூமிசாரம்
தெருளான அமுரி சுன்னம் நாதம்விந்து
தெரியான புலத்தியனே இன்னும்கேளே.

12. கேளப்பா அமிர்தமென்றும் வாய் நீ ரென்றும்
கெட்டியான காரமென்றும் சாரமென்றும்
வாளப்பா நஞ்சென்றும் அமுரியென்றும்,
வளமான நீலமென்றும் வாய்வு என்றும்
பாழப்பா பச்சையென்றும் பவழமென்றும்,
பாங்கான ரத்த வர்ணம் ரூபி என்றும்
கோழப்பா இருந்தவன்தான் நீலிஎன்றும்,
குடிகாரி வெறிகாரி குசத்தியாமே.

13. ஆமப்பா குருமுடிக்கும் இடையாகத்தை
அன்பாகச் சொல்லுகிறேன் விபரமாக
தாமப்பா கால மென்ன மீனமேடம்மென்ன
கடுவான பவர்ணமியில் முன்னும் பின்னும்
தாமப்பா சூரியனிடம் முன்னும் பின்னும்
தயவாக இருவகைக்கு மூன்று பங்காய்
ஓமப்பா ஒளிவெளியில் நின்றுகொண்டு
உற்பனமாய் சோடச உபசாரஞ்செய்யே.

14. செய்யப்பா மூப் பூவைப்பாங்காகக்கொண்டு
திறமாக பீங்கானில் எடுத்துக்கொண்டு

வெய்யப்பா சிவமுப்பு மூன்றுபங்கு
வளமான சத்தியுப்பு நான்குபங்கு
கொய்யப்பா நிலவுப்பு இரண்டுபங்கு
குணமான பூரமுடன் புனுகு ஒன்று
மையப்பா பஞ்சவர்ணம் வீரம்பாதி
மல்லிகையின் சாற்றாலே ஆட்டுவாயே.

15. ஆட்டுவாய் ஒரு சாமம் பாகஞ்செய்து
அன்பாக வில்லைதட்டி இரவியில் காய்ந்தால்
யூட்டுவாய் பஞ்ச சுன்னக் குகையில் வைத்து
உற்பனமாய் உளுந்தென்ற சீலை செய்து
யாட்டுவாய் மஞ்சள் வர்ணம் புடமே போடு
மல்லிகைப்பூ போலதாம் சுன்னமாச்சு
நீட்டுவாய் முப்பூவின் சுன்னந்தன்னை
நெறியுடனே பத்திரமாய் எடுத்துப்பாரே.

16. பாரப்பா சாரமது பத்துபங்கு
பண்பான சுன்னமது ஒன்றுங்கூட்டி
நேரப்பா பீங்கானில் வைத்தாயானால்
நிறைகொள்ளா சலமாகும் வீரம் பூரம்
ஆரப்பா உறமுடனே நீலாங்கு
அன்பான காரமுடன் ஐந்துங்கூட்டி
சேரப்பா சரக்குகளைத் துலைத்துப்போட
சிவ—சிவா சகல வஸ்தும் சுன்னமாமே

17. சுன்னத்தைத்தானெடுத்து பணத்தில் பாதி
சூதத்தில் தாக்கிடவே திரண்டு போகும்

சுன்னத்தை நினையாதே வெளிவிடாதே
பேசாதே நாவினாலே பேசப்போமோ
அன்னத்தையுண்டு கொண்டு குகையிலேரு
அருளான யோகத்தில் இருந்து ஏகு
சொர்ணத்தை தருகுமடா பிரமவித்தை
சுயம்பான நவலோகம் தங்கமாமே.

18. ஆமப்பா பாஷாணம் நவரத்தினந்தான்
அழகான நவரசங்கள் சுன்னமாகும்
தாமப்பா துருசதுவும் சுன்னமாகும்
தயவாகத் தங்கத்தில் கொடுத்தாயானால்
வேமப்பா சுன்னத்தை எடுத்துக்கொண்டு
வெள்ளியிலே கொடுத்திடவே சுன்னமாகும்
தாமப்பா தாம்பிரத்தில் ஒன்று தாக்க
தப்பாது பத்தரைதான் ஆகும்பாரே.

19. பாரப்பா இப்பாகம் மறந்திடாதே
பழிகொள்ளும் சீடர்களைச் சேர்ந்திடாதே
ஊரப்பா மாய்கைதனில் அகப்படாதே
உற்பனமாய் யோகத்தில் நிலைத்துநின்று
காரப்பா உப்பெடுக்கும் நாள்விடாதே
—கைபாகம் செய்பாகம் மறந்திடாதே
வேரப்பா சகலத்திற்கும் இதுவே மூலம்
வெளிதோணச்சொல்லாதே விண்ணை நோக்கே.

20. விண்ணிலே உண்டான சுத்த கெங்கை
வெளிதோணச் சொல்லாமல் மறைத்தாரப்பா

மண்ணிலே பிறந்தவர்கள் அறியமாட்டார்
வாய்வீணாய் பேசுவார் மட்டிமாண்பர்
கண்ணிலே காணுதபொருளை யெல்லாம்
கண்டவன்போல் பேசிடுவான் கருத்தைப்பாரான்
தன்னிலே உண்டான தாதுமூலம்
சார்வான ஞானியல்லோ அறிவான்தானே.

21. தானென்ற மூல மெல்லாம் அறிந்து கொண்டு
தனைப்பிரித்து சொல்லவென்றால் சோலிமெத்த
வானென்ற புலத்தியனே உனக்காய் சொன்னேன்
வகையான உருக்கினமும் செந்தூரங்கள்
தேனென்ற பாகமப்பா இந்தநூல்கள்
செகத்திலே கிடையாது நானூரப்பா
வானென்ற இந்த நூல்தனக்கு முப்பு
பரிபாஷை யில்லாது மதிநூல்கண்டாய்.

22. கண்டாயோ முப்பூவின் வழலை மார்க்கம்
காரணத்தின் மகிமையெல்லாம் எனக்கு நன்றாய்
விண்டாரே எந்தன் குரு சுருக்கில்தானும்
விதமான வித்தையெல்லாம் எனக்குச்சொன்னார்
மண்டலத்தோர் வாழ்கவென்று போகத்தோடு
வரிசைபெற ஞானமெல்லாம் வகையாய் சொல்லி
தென்திசை சேர்புவிபதனில் வாதம்பார்க்க
செப்பினார் வழலை தனைச்செப்பினாரே.

23. செப்பினார்மூன் றெழுத்துவாலை தன்னைத்
தியானிக்க வாதமெல்லாம் சித்தியாகும்

செப்பினார் சக்கரத்தின் செய்திகேளு
திறமான முக்கோணம் வட்டம்போடு
செப்பினார் வட்டமதில் ஸ்ரீயும்போட்டு
தேவியுட அக்ஷரந்தான் ஐயும் கிலியும் சவ்வும்
செப்பினார் குருவேஜயா தேவிதனை
தரிசிக்க வாதம் சித்தேயாமே.

24\. சித்தியாம் தேவிதனை தெரிசித்தாக்கால்
செகத்திலே வாதமுறை தெரிந்துபோச்சு
பக்தியுடன் நிற்வாணி பூசைசெய்து
பாமனுட மூத்தமகன் பூசைபண்ணி
எத்திசையும் ஆவதற்கு அண்டகற்பம்
எடுத்தமுறை தப்பாது ஓடலாகும்
சத்திமகன் கந்தனுட பாதம்போற்றி
அவனிதனில் வாதமுறை பார்க்கலாமே.

25\. ஆருமென்று நினைப்பதற்குக் கந்தவேல்தான்
விஸ்தார சக்கிரத்தை விள்ளுவேன்காண்
வாணியுட அருளாலே சட்கோணமிட்டு
வளஞ்சிறந்த எழுத்திதனை வணங்கிக்கேட்டேன்
நீணிலத்தில் விள்ளாதே சரவண பவவென்று
நிகழ்த்தியே நிர்மலமாய் நினைத்துக்கொண்டு
பூரணமே பிரணவத்து சத்தி சூட்சம்
புகழாக வட்டமிட்டு மூலைதோறுந்தானே.

26\. தானென்ற பிரணவத்தை சுத்திப் போட்டு
துளசிகொண்டு பூசித்து சொல்லக்கேளு

ஏனென்ற புவகிரியோடு பாலுந்தேனும்
மெய்தவுள்ள வகையோடு நைவேத்தியங்கள்
தேனென்ற மனிதோர்க்கு இதுவே ஞானம்
சித்தருக்கு வாதமெல்லாம் திறந்து போச்சு
ஆறுகின்ற மனத்தோர்க்கு வாதம்சித்தி
அப்பனே வாதமுறை அறியக்கேளே.

27. கேளப்பா தும்பையோடு வேலிதானும்
சொற்பெரிய குளிக்கியொடு காணி காணி
போருமெள்ளவே நீ அரைத்து வெள்ளிதன்னில்
விதமாக குருபோட்டு மைனம் போல
வெல்லவே அரைத்துருட்டி திரட்டி ஒக்க
விதமான குகைபோல மூடிக்கொண்டு
தில்லைதனில் நடம் புரியும் தேவிபாதம்
தியானித்து சீலமண் செய்து போடே.

28. போடப்பா புடமதுதான் கெஜமேபோடு
குறிப்பாக வாலையவள் கிருபையாலே
வெள்ளப்பா வெள்ளியது நீறிப்போகும்
வெள்ளியுட மகிமைதான் என்னசொல்வேன்
நள்ளியதோர் அஞ்சிகளஞ்சி தகட்டில்தானே
நயமாகத்தான் கெடுக்க வயதோகேளு
எள்ளளவுந் தப்பாது ஈசனுணை
ஈரஞ்சு மாத்தததுதான் உண்மைதானே.

29. தானென்ற துருசு வெள்ளை சொல்லக்கேளு
தயவான கலையினுட பாலைவாங்கி

வானென்ற ரவியில் வைக்க வத்திப்போகும்
வழலையுட கருவிட்டால் வெள்ளமாகும்
வேனென்ற அரசன்மேல் சௌக்காரத்தை
வரிசையுடன் தான்பொதிந்து ஜலத்தில்முக்கே.

30. அமுக்கியல்லோ மூன்று தினம் ரவியில் வைக்க
அதிகவெள்ளை சுன்னமதுக்கீடோ இல்லை
பத்தியென்ற நிறமதுதான் மாறிப்போகும்
பச்சைதனை சலம்விட்டு அரைத்து நன்றாய்
சிக்கியதோர் பச்சைதனை வில்லைதட்டி
தினமொன்று உலரவைத்து சீலைசெய்து
மூக்கியமாய் ஓட்டில்வைத்து கவசம்செய்து
முழுமகல சாண்குழிக்குள் மூடிப்போடே.

31. போடப்பா ஏழுதினஞ் சென்றபின்பு
புகழான பதயானைச் சுன்னமாகும்
கேளப்பா இச் சுன்னச்சேதி சொல்வேன்
செகத்திலே குருசுமுறை செப்பலாகா
நீளப்பா நோய்கண்ட நிர்மூடற்கு
விள்ளுமோ விள்ளாது சிசந்தான் கேளே.

32. கேளப்பா நெருப்போடு தளத்தின் சாரும்
கெடியான காணியுட சாருங்கூட்டி
கேளப்பா இன்னமொரு சேதிகேளு
திருவையுள மத்தேறு பிசிக்கிச்சாரும்
கேளப்பா நாருதமுன்னையோடு
கெடியாகத் தான்பிழிந்து கும்பலாக்கி
கேளப்பா பத்துதரம் அதிலே விட்டு
கெடியான சுண்டவிரை அதிலேபோடே.

போடப்பா துரிசியுட குருவைத்தானே
புகழாக பத்துக்கு ஒன்றுபோடு
நாடப்பா போட்டபின்பு பாஷாணந்தான்
நன்றாக நீ பிடித்துக் கழஞ்சிப்போடு
தேடப்பா காயமொரு கழஞ்சிபோடு
திகட்டாத கணபதியின் பாதந்தன்னை
நாடப்பா நீயறிந்து மூடிக்கொண்டு
நலமான மண்டலந்தான் நிழலில்வையே.

வையப்பா மண்டலந்தான் சென்ற பின்பு
வளஞ்சிறந்த குளிகையது மணிபோலாகும்
பொய்யல்ல வென்குருநாதன் சொன்னதப்பா
—புகழாக ரவியில்வைக்க குளிகையாகும்
மெய்யப்பா இந்தமுறை வெளியாய்ச் சொன்னேன்
வெள்ளியுட குருவதை நீதடவி நீயும்
மையப்பா குகையில் வைத்து உருகும்போது
மகத்தான பத்தரையாம் பாமந்தானே.

ஆணுவமாம் மாய்கையொடு அலைவுதள்ளி
அப்பனே அசைவையுடதலமும் தள்ளி
ஆணுவமாம் மம்மதைகள் நீக்கிநீயும்
அங்கென்று ஊன்றிடவே இருக்கைநீக்கி
ஆணுவந்தானந்த விடமது தானப்பா
அதின்மேலே நின்றெழுத்தை அறிந்துபார்க்கில்
ஆணுவமாய் மாய்கையற்று வெளியாகக்காணும்
அப்பனே: ஆட்ந்தோர்க்கு நடனமாமே.

36. நடனமது காணுமென்று சொன்னீரையா
நாயடியேன் அறிஞலே கண்டுகொண்டேன்
நடனமது சொன்னதுவும் குறைவோ இல்லை
நலமான தங்கத்தின் மகிமைதன்னை
நடனமது சொன்னதுபோல் எனக்கு நன்றாய்
நாயனே சொல்லுமென்று பணிந்தபோது
நடனமது தங்கத்தின் முறையைக் கேட்டேன்
நலமான புலத்தியனே நயந்துசொல்வேன்.

37. சொல்லக்கேள் பெரியோர்கள் தங்கவித்தை
சொல்லென்று பணிந்ததினுல் சொல்லக்கேளு
நல்லோர்கள் வந்தாக்கால் சொல்லவேணும்
நலமான வீரனுட நிறையைக்கேளு
எல்லையில்லா வேதைமுறை பாடலாகும்
எட்டாத வீரனைத்தான் வாங்கிக்கொண்டு
மல்லென்ற வளைச்சாற்றை வீரனோடேவிட்டு
வையப்பா ரவிமுகத்தில் மூன்றுநாள்தான்
அல்லென்ற பிறப்பற்று சுன்னமாகும்
அப்பனே அச்சுன்னம் வாங்கிக்கொள்ளே.

38. வாங்கியபின் சவுக்காரம் கொண்டுவந்து
வடிவாக காயத்தில் அமிர்தம்விட்டு
தாங்கிநன்றாய் அரைத்தவுடன் காரத்தப்பி
தயவாக ரவியில்வைப்பாய் மூன்றுநாள்தான்
ஏங்கியே காரமது சுன்னமாகும்
எடுத்தமுறை தப்பாது இனங்கள்தானும்

பாங்கியென்ற சீனத்தின் காரந்தன்னை
பாலகனே முலைப்பாலில் பாங்காய்வையே.

39. வையப்பா மூன்றுதினம் ரவியில் வைக்க
வளஞ்சிறந்த சீனமோ சுன்னமாகும்
செய்யப்பா காரத்தின் சுன்னத்தோடு
திறமான குருத்தில் சமனாய்க்கூட்டி
மெய்யப்பா இதுமூன்று சுன்னந்தானும்
மேதினியில் விள்ளார்கள் பெரியோரப்பா
உய்யப்பா சஞ்சீவி இதுவேயாகும்
உத்தமனே அறிந்துரைத்தேன் உத்தப்பாரே.

40. உத்துப்பார் ஒன்றுமில்லை வெளியாய்ப் போச்சு
ஓகோகோ வீரமுந்தான் சுன்னமாச்சு
சுட்டில்லா காரமது சீனச் சுன்னம்
சுகமாக இரண்டிடைதான் சேர்த்துக்கொண்டு
பற்றிநன்றாய் மனத்தோடு தேவிதன்னை
பாலகனே உள்ளத்தில் பற்றிக்கொண்டு
எத்திசையும் தானாகும் தங்கந்தன்னை
இன்பமுடன் முத்தமிட்டு ஏற்றுக்கொள்ளே.

41. கொள்ளப்பா இன்னுமொன்று சொல்லக்கேளு
கொடியான தும்பையொடு வேலிதானும்
வாளப்பா குணிக்கியொடு காளிதானும்
வண்மையுள்ள மந்தாரம் உருவியொடு
வேளப்பா தனைநினைத்து அரைத்துநீயும்
விதமாக தங்கத்தி லரைத்துக்கொண்டு

ஆளப்பா ஆதிதனை அரைத்துக்கொண்டு
அப்பனே தங்கத்தில் கவசம்பூசே.

42. பூசப்பா அதன்மேலே பூசைசெய்து
புகழான கவசமது உலர்ந்தபின்பு
பூசிப்பாய் வாலையுடபாதம் போற்றி
புகழாக நாழிகையோ சொல்லக்கேளு
வாசியப்பா தாறோடும் எண்பதுந்தான்
வாகியங்கே சென்றக்கால் புடமேயாகும்
தூசிப்பாய் தீபத்தின் ஒளியேகாணும்
சூக்ஷமது தங்கத்தின் நீறுதாமே.

43. ஆமப்பா நீறதுவை எடுத்துக்கொண்டு
அப்பனே செந்தூர முறையைக் கேளு
ஆமப்பா வெடியுப்பு கிளிஞ்சிதானும்
அப்பனே சீனமொடு வீரந்தானும்
ஆமப்பா ரசமுடனே கெந்திசேர்த்து
அழகான அமிர்த ரசமிட்டு ஆட்டி
ஆமப்பா பில்லைசெய்து உலர்ந்தபின்பு
அழகான புடமிடவே ஆலம்பழம் போலாமே.

44. ஆமப்பா செந்தூரம் எடுத்துக்கொண்டு
அப்பனே ஆத்தாளை பூசைசெய்து
ஆமப்பா நலமான பூசைசெய்து
சத்திமகன் தன்னையுமே பூசைசெய்து
ஆமப்பா சிதம்பரத்தின் பூசைசெய்து
மார்க்கமொடு செய்துமிக ஆகரித்து
ஆமப்பா செந்தூர மெடுத்துக்கொண்டு
அழகான வேதையுட முறையைக்கேளே.

45. கேளப்பா முன்சொன்ன சூதங்கட்டி
கெடியான குளிகைதனில் தடவிநன்றாய்
கேளப்பா குகையில்வைத்து உருகும்போது
கெடியான குகையுமோ வர்ணங்காணும்
கேளப்பா எழுமைதான் வயதாகாணும்
கேடில்லை தேவியுட பாதங்காணும்
கேளப்பா இந்தவிதம் செய்து பார்த்தால்
கீர்த்தியுண்டாம் பரமனது பாதங்காணே.

46. ஆணவமாம் மனத்தாலே அழிவார்மூடர்
அல்லாட்டால் அவைவசமாம் அவர்க்கே கிட்டும்
ஆணுவமாம் மாய்கை என்ற மதத்தைத்தள்ளி
அப்பாலே நீகடந்து அருளைப்பாரு
தானுவென்ற சிதம்பரத்தைப் பற்றிக்கொண்டு
தப்பாமல் இன்னுமொரு சேதிகேளு
வேணுமென்ற குளிகையெல்லாம் இதமாய்ச் செய்ய
விள்ளுகிறேன் நீ மகனே விரைந்துகேளே.

47. கேளப்பா சூதத்தில் குளிகைஐயா
கெடியான எண்பதுநாள் சென்றபின்பு
வாளுற்ற கண்ணாரும் மயங்குவார்கள்
மைந்தனே அக்குளிகை வேதையாட
மாளப்பா செந்தூரம் கண்டபோது
மக்களே ஒன்பதரை மாத்துகாணும்
ஆளப்பா புவியெல்லாம் இதுவேகொண்டு
ஆனந்த பதம்போற்றி அறிவைப்பாரே.

48. பாரப்பா வெள்ளியுட நீற்றைக்கண்டால்
பன்னிரண்டு வயதுக்கோ குறைவுஇல்லை
சேரப்பா மட்டமது அதிலேகூட
செகச்சால மாந்தற்கு அதுவேபோதும்
தேரப்பா பானம்என்ற மாய்கைதள்ளு
தேர்ந்தாக்கால் செய்தியின்னும் செப்பக்கேளே.

49. கேளப்பா செந்தூரம் வருஷமொன்று
குறிப்பாக பணவிடைதான் கொண்டுவாநீ
ஏளப்பா எண்ணெயொடு புளியுந்தள்ளு
இதமாக உப்போடு எல்லாந்தள்ளு
தள்ளப்பா விரிமடவாள் ஆசைதள்ளு
கனவிலுமே நினையாதே கடந்துநில்லு
தள்ளப்பா தேகமது வச்சிரகாயம்
சிவனவனும் பிரமனிவர் செப்பினாரே.

50. செப்பியதோர் செந்தூரம் உண்ணும்முன்னே
தேகத்தில் வழலைதனைக் கழற்றிக்கொண்டு
ஒப்பில்லா செந்தூரம் உண்ணும்போது
உத்தமனே பச்சரிசி பாலுங்கொள்ளு
தப்பில்லை மண்டலத்தில் கொண்டுவாநீ
சாவில்லை ரவிமதியு முள்ளமட்டும்
மப்பியதோர் தேகமது சொர்ணமாகும்
அப்பனே மூன்றுமுறை அறியச்சொல்வேன்.

# தலைமுழுக பஞ்ச கற்பம்.

51. சொல்லக்கேள் வேம்பினிட அரிசிதானும்
சுகமான கடுக்காயும் நெல்லியோடே
வெல்லக்கேள் தான்றிக்காய் ஆவின் பாலில்
மிதமான மிளகோடு வெதுப்பிக் கொண்டு
வெல்லக்கேள் வெந்நீரில் முழுகும்போது
விளங்குகின்ற குறியெல்லாம் பளிச்சென்றுதோன்
சொல்லக்கேள் நரைதிரையும் மாற்றி வைக்கும் [றும்
அப்பனே ஆணுவமாம் மாய்கை நீக்கே.

52. நீக்கப்பா பெண்மாய்கை மண்ணும் விண்ணும்
நினைவிலுமே நினையாதே நிசமாய் சொன்னேன்
போக்கப்பா ஞானவிதி வாதவித்தை
பூசைவிதி தீட்சை விதி புகழாய்பூசி
நோக்கப்பா சுழிமுனையில் நோக்கிஒருமனதுடிக்குமுன்னே
அண்டமெல்லாம் வெளியாய் தோன்றும்
வாய்பேச்சு சொன்னுக்கால் ஞானமில்லை மனமுறைந்து
பார்ப்போர்க்கு ஞானமாமே.

53. மெஞ்ஞான ஞானமொடு வாலைபூசை
வேதையுடமார்க்கமெல்லாம் விளங்கச்சொன்னேன்
கையான சூதத்தைக் கட்டும் மார்க்கம்
கனமான புலத்தியனே உனக்குச்சொல்வேன்
பையான பிரமன்வாய் எழுத்துச்சொல்ல
பாதமது தான்பிடித்து பணிந்துகேட்க
செய்யாத குருவுதன் தீட்சைதன்னை
திருமனது தானிறங்கி செப்பினாரே.

54. செப்பினார் தைலத்தின் மகிமை தன்னை
செப்பார்கள் செகத்தோர்க்கு செப்புவேன்கேள்
ஒப்பாருமில்லை இந்த தைலபோக்கு
உத்தமனே தைலமுறை வுகந்துகேளு

வெப்பாருந்தான் விளங்க கவண்டன் தன்னை
விபரமுடன் தான் உலத்திலைடந்தாநீயும்
முப்பாழுந் தான் விளங்கும் பாண்டத்துள்ளே
முக்கியமாய் வைத்தபின்பு அரையக்கேளே.

55. கேளப்பா பாண்டத்தில் அடைத்துக்கொண்டு
கெடியாக வாய்மூடி சீலைசெய்து
கேளப்பா பாண்டத்தில் தமரும் இட்டு
கெட்டியான தைலமதை வாங்கிகொள்ள
கேளப்பா பீங்கானை கீழே வைத்து
கெஜபுடமே நீ போடு தைலமாகும்
கேளப்பா தொண்ணூரும் ஆறும் சென்றால்
கெடியான தைலமது வாங்கிக்கொள்ளே

56. கொண்ட பின்பு சூதமது பத்துக்கொன்று
கூட்டியே தைலமது இட்டுக்கொண்டு
மண்டலத்தோர் வாழ்த்துகின்ற துருசுச் சுன்ன
வண்மையுடன் ஓர் கழஞ்சி தூக்கிகொண்டு
யெண்டிசையோர் புகழ்ந்திடவே யரைப்பாய்சாமம்
யெடுத்த முறைதப்பாமல் யின்னங்கேளு
அண்டருக்குமேலாகும் சூதந்தன்னை
அப்பனை கலயத்தில் அடைத்துகொள்ளே

57. கொள்ளப்பா கலசத்தில் அடைத்துக்கொண்டு
குண்டான ஓர் களஞ்சி காயம் போடு
கொள்ளப்பா கணபதியின் பாதந்தன்னை
கூர்மையுடன் தியானித்து அடைத்து வைத்து
மெள்ளப்பா மெழுகு கொண்டு அடைத்துப்போடு
மெள்ளவே தானியத்தில் புடமாய்தாக்கு
கொள்ளப்பா நாற்பது நாள் சென்றெடுத்து
நலமானரவிமுகத்தில் மைந்தாவையே.

58. வையப்பா நாள் மூன்று சென்ற பின்பு
வடிவான குளிகையின்னம் சொல்லக்கேளு
மெய்யப்பா தங்கமது செந்தூரந்தான்
மெள்ளவே தடவி நீயுருக்கும்போது
செய்யப்பா அதின் குணத்தை இன்னம் சொல்வேன்
செகச்சாலமாகுதற்கு இதுவே போக்கு
மெய்யப்பா யெட்டரைதான் வயதோ காணும்
விள்ளுகிறேன் குளிகை விதம் இன்னும் கேளே.

59. கேளப்பா யெண்பது நாள் குளிகை சென்றால்
கெடியான பதினாறு வயது காணும்
கேளப்பா அதி நாளும் ரெட்டியுளே சென்றால்
கேடில்லா வயது முப்பத்தாருமாகும்
மெள்ளப்பா இப்படிதான் செல்ல செல்ல
யேருமடா மாத்ததிக மதிக முண்டு
கேளப்பா வருஷமது மூன்று சென்றால்
கெட்டியாம் குளிகையாம் கெவுனமாமே

60. ஆமப்பா குளிகை தன்னை எடுத்துக் கொண்டு
ஆத்தாளை பூஜை பண்ணி அஷ்ட கர்மம்
ஆமப்பா சாரணையை முறையா யேற்றி
அப்பனே நவமான பூஜை செய்ய
ஆமப்பா கணபதி தன் பாதம் போற்றி
வரிசையாய் சிந்தைதனில் நிறுத்திகொண்டு
ஆமப்பா கௌனிக்க குளிகை ஆகும்
அன்புடைய மைந்தா நீ அறிந்து காணே

61. காணப்பா கெவுனமது குளிகையாகும்
கண்டவர்க்கு விள்ளாதே கருதிப்பாரு
காணப்பா அன்பது நாள் சென்றே யந்த
கனத்த தொரு குளிகையது வெள்ளி நீற்றால்
காணப்பா வதில் போட வயதோகேளு
களங்கமற்று நாற்பதுக்கு மேல தாகும்.
தானப்பா அதின் செய்கை போக்கு மெத்த
கைகண்ட வித்தை இது கருதிப்பாரே

62. கருதிப்பார் குறிப்பறிந்து வாதந்தன்னை
கை முறையாய்பாருட்டால் வாதம் பொய்யாம்
பார்த்திடுவாய் செந்தூரம் நீற்றின போக்கு
பாங்கான குளிகை வகை வாலை தீட்சை
சேர்த்திடுவாய் நவகோண முக்கோணத்தில்
தேவியுமோ வந்தனக்கு ஞானஞ் சொல்வாள்
கார்த்திடுவாய் தேவிபதம் என்றுறைத்தான்
கருத்து வைத்து கார்த்திடவே கருக்குருஞ்
[சொல்வாள்

63. சொல்வாளே கவுன முதல் அஷ்ட கர்மம்
சுருதியது முடிந்தவிடம் சொல்வாள் கேள்
சொல்வாளே சிதம்பறத்தின் பூஜை யொடு
துஞ்சாமல் இருப்பதற்கு கர்பம் சொல்வாள்
சொல்வாளே நீ கேட்ட வரங்கள் சொல்வாள்
சுந்தரியை பூசித்தால் யெல்லாருஞ் சித்தி
சொல்வாளே வாதமொடு யோகமார்கம்
சொல்லாத ஞானமொடு சொல்வாள் சித்தே.

64. சித்திக்க வேணு மென்றால் மைந்தா கேளு
தேவியுட சக்கரத்தை வரைந்து கொண்டு
பக்தியுடன் கணபதியை பூஜை செய்து
பரிசுடனே முருகனையும் பூஜை செய்து
யெத்திசையும் நிற்கின்ற அஷ்டவாலை
இன்பமுடன் பூசித்து யேத்திக்கொண்டு
அக்தியை தானுமித்தேரன் தன் கிருபையாலே
அஷ்டதிசை மெச்சவுந்தான் பூஜை செய்யே.

65. செய்யவே பூஜைதனை கிரமமாக செய்தால்
செகத்திலே உனக்கிடுசித்தரில்லை
செய்வாயே வைரவனை பூசை பண்ணி
திறமான வைரவியை பூசி பூசி
செய்வாயே நந்தீசர் பூஜை செய்து
செய்கையுள்ள வைப்பிர்ம பூஜை செய்ய
செய்வாயே இப்படியே பூசித்தே
திறமான தேவியுட பூஜை கேளே

66. கேளப்பா புனுகொடு கெந்தனுதி
கெடியான சந்தனமும் அஷ்ட கெந்தம்
கேளப்பா பிச்சையோடும் மருக் கொளுந்து
கிருபையுடன் மல்லிகை பூ செண்பகப்பூ
கேளப்பா தும்பை யோடு தாழையாகும்
கேடில்லா தாமரைப்பூ மெத்த நன்று
கேளப்பா அகிலோடு குங்கு மந்தான்
கிருபையுள்ள வஸ்துவோடு வைக்க நன்றே.

67. நன்றாகும் துளசியோடு மைந்தா கேளு
நலமான வெள்ளெருக்கன் மெத்த நன்று
நன்றாகும் மந்தாரைபூ தானன்று
நவமான பூவாலே அர்சித்தேற்று
நன்றாக பால் பழமும் தேனும் மாவும்
நலமான வடையோடு சர்வ நைவேத்தியம்
நன்றாகும் மலரொடில கிரியோடே
நலமான பிலாக் கனியை வைத்து பூசிப்பாயே.

68. பூசிப்பாய் புலத்தியனே இன்னமொன்று
புகளான அமுதோடு கரும்புதானும்
பூசிப்பாய் மான்கறியும் அவலோடப்பம்
புத்திரனே இன்னமொரு சேதி கேளு
பூசிப்பாய் துவரையெரடு கடலை தானும்
புத்திரனே வெற்றிலை அடகாயோடு
பூசிப்பாய் தூபமொடு தீபம் காட்டி
புனலறிந்து கர்பூர தீபம் செய்யே

69. செய்யப்பா இப்படியே மண்டலத்தான்
தீர்மானித்து தேவி தனை பூஜை செய்வாய்
செய்யப்பா உமயவளும் வந்துனக்கு
திறமாக கடாக்ஷித்து அருள் புரிவாள் பாரு
மெய்யப்பா நினைத்த கருமமெல்லாம் பார்ப்பரையாள்
தேவியுமோ தருவாள் பாருமையப்பா
வேள் விழியாளுமையாள் தானும் மைந்தானும்மை
தானே உனக்குவரம் தருவாள் தானே.

70. தானென்ற முப்பூவின் வழலை மார்க்கம்
தாராள தேவியுமே தருவாள் பாரு
தானென்ற யோகமொடு ஞான விதி
தந்திடுவாள் தாயான தேவியான தேவியப்பா
தானென்ற சிதம்பரத்தின் சைகை சொல்வாள்
சாகாத கற்ப முறை நன்றாய் சொல்வாள்
தானென்ற தேவிதனை பூசித்தேற்ற
சகல வித்தையுனக்கு வரும் மைந்தாகேளே.

71. கேளப்பா அஷ்டகர்ம குளிகை தன்னை
கெடியான கரந்தைதனில் கட்டுஞ் சூதம்
கேளப்பா வசியமது குளிகையாகும்
கெடியான சிறகில் வைக்க வசியமாகும்
கேளப்பா கையில் வைக்க ஆர் வந்தாலும்
லோகமெல்லாம் அவனையே வணங்கி நிற்கும்
கேளப்பா நினைத்த தெல்லாம் முடியும் பாரு
கெடியான குளிகையிது வாகுங்காணே.

|. காணப்பா கரந்தைதனைக் கொண்டு வந்து
கைமுறையாய் சூதத்தைக் கட்டிக்கொண்டு
காணப்பா வாயிலிட கண்டபேர்கள்
கலங்கியே தான் மயங்கி மோகிப்பார்கள்
காணப்பா கலங்காத பிசாசு பூதம்
கானகத்தில் வாழுகின்ற மிருகமெல்லாம்
காணப்பா உன்னைக் கண்டு மோகமாகும்
கன்னியருங் கைவசமாம் கருதிப்பாரே.

'3. பாரப்பா வெள்ளருகின் பாலுங்கூட
பாங்கான பேய்மிரட்டி சாருங்கூட்டி
பாரப்பா சூதமதை கட்டிக்கொண்டு
பாங்கான குளிகையது தம்பனமுமாகும்
பாரப்பா பேயோடு பிசாசு பூதம்
பல மிருகம் பாம்போடு ஆனையெல்லாம்
பாரப்பா சொல் கேளா மனிதரெல்லாம்
பச்சிலைபோல் தான்கலங்கி தம்பமாமே.

74. ஆமப்பா காளியதை கொண்டு வந்து
அளகான ஆணையின்மேல் போட்டு மாட்டு
சாருமப்பா அரெசணத்தில் சூதந்தானும்
தயவான ஆத கிருஷ்ண குளிகையாகும்
போமப்பா வேதைக்கு இதுவே போக்கு
புண்ணியனே மடியில் வைத்து காட்டில் சென்றால்
சேமப்பா சித்தர் வந்து வலிய தானே
செப்பறியாத முறை செப்புவாரே.

75. செப்புவார் வாதமொடு யோக ஞானம்
தீட்சை விதிவாலையுட சேதி யெல்லாம்
செப்புவார் நலமான பூசை மார்க்கம்
தெளிய வைப்பார் உன் மனது தெளிந்து தேறு
செப்புவார் சிதம்பரத்தின் விளையாட்டெல்லாம்
செகச்சால மாகுதற்கு விதத்தை சொல்வார்
செப்புவார் திரிபுரையும் தவணையோடு
ஜெயங் கொள்ளும் வாசியுட மூலந்தானே.

76. தானே நீ இன்னமொரு குளிகை கேளு
சஞ்சீவி அழுகண்ணி கொண்டு வந்து
தானே நீ சூதமதைக் கட்டிக்கொண்டால்
தப்பாது வித்வேஷண குளிகையாகும்
தானே நீ பார்த்துணர்ந்து தேறு தேறு
சகல வித இந்த முறை போக்கை யெல்லாம்
தானே நீ அறிவ தல்லால் புவியுளோர்க்கு
முறை சொல்லலாகாது புவியோர்க்காக.

77. ஆகாத காரியத்தை யடக்குவோர்க்காய்
அறிவிலுமே யிருந்தவனும் அவனுக்கப்பா
வாகான குரு நிலையாயில்லா விட்டால்
அவனிடத்தில் பன்னிரண்டு வருஷமாக
ஆகாத மோக மெல்லாம் மில்லாவிட்டால்
அப்பனே யிக்குளிகை அறிய சொல்லி
ஆகாத மாய்கையுட மனதைபோக்கி
அவனை நன்றாய் நீ அநுபவ மறியக்கேளே.

78. கேளப்பா தொழுகு கண்ணி சாற்றினாலே
கெடியான சூதமது யானை யாகும்
மாளப்பா சாற்றையுடன் கண்டபோது
இக்குளிகை மகனே கேளு
நீளப்பா இந்த முறை குளிகை போக்கை
நினைக்கு முன்னே குளிகை முறையாடலாகும்
மாளப்பா இந்த முறை மாரணந்தான்
மைந்தனே இக்குளிகை யறியச் சொன்னேன்.

79. சொல்லுகிறேன் பேதநத்தின் குளிகை மார்க்கம்
சொர்ன ஊமத்தையது கொண்டு வந்து
சொல்லுகிறேன் சூதத்தை விட்டு ஆட்டு
சுகமான சூதமதுகட்டும் கட்டும்
சொல்லுகிறேன் பேதனத்தின் குளிகைபோக்கு
சொல்லார்கள் பெரியோர் மகனே கேளு
சொல்லுகிறேன் வேதை முறை குளிகையாகும்
சூட்சமுடன் கை முறையாய் செய்து பாரே.

80. பாரப்பா சூதமது சோதி தன்னில்
பட்டவுடன் கட்டியல்லோ மணிபோலாகும்
பாரப்பா இக்குளிகை யென்ன சொல்வேன்
பரமனுமையாளுக்கு வுபதேசித்தார்
பாரப்பா பிரசண்ட குளிகையாகும்
பாங்கான யெட்டு முறைசுன்னமாகும்
பாரப்பா வாயிலிட்டு புதையல் பார்க்க
பாதாளத்தில் இருப்பதெல்லாம் கண்ணில்காணும்

81. காணப்பா அண்டமொடு பிண்டங்காணும்
கருதிப்பார் இந்த முறை கவனிப்பாக
காணுமப்பா ஆருவரை வீடு தாண்டி
கடல் கடந்து அப்பாலே கமலமான
காணுமப்பா பிரம்மமது அதுவே காணும்
கண்டாக்கால் விள்ளாதே கருத்தில் வைப்பாய்
காணுமப்பா இக்குளிகை சேதிப் போர்க்கு
கபாடமதை தானடைத்து கருத்துள் வையே

82. வையப்பா இன்னமொரு முறையக்கேளு
மைந்தனே மதயானை கட்டில்போக
வையப்பா மல்லிகைப்பூ சாற்றினாலும்
வைய்கத்தில் குமரியுட சாற்றினாலும்
வையப்பா இரண்டுவகை சாற்றினாலும்
வளஞ்சிறந்த பீங்கானில் வைத்துக்கொண்டு
வையப்பா சூதத்தை யதிலேவிட்டு
மத்தித்துரவில் வைக்க சாமமொன்றே.

83. ஒன்றான ஜாமத்திலெடுக்கும்போது
உத்தமனே வாலை ரசம் சூதமப்பா
ஒன்றான குளிகையது சொல்லக்கேளு
ஒளியாமல் மஞ்சணையின் மெழுகு கொண்டு
நன்றாக குகைதன்னை பிடித்துக்கொண்டு
நலமான சூதத்தை விட்டு நீயும்
நன்றான வெள்ளியுட குருவுதன்னை
நலமான களஞ்சிக்கு இரண்டு போடே.

84. போடப்ப வெள்ளியுட நீற்றைப்போட்டு
புகலான காடையுட புடமே போட்டால்
நீடப்பா உருகியது மணிபோலாகும்
நிச்சயமாய் தேவியுட பாதந்தன்னை
நாடப்பா தேவிபதம் நாடிக்கொண்டு
நலமான மணியதனை எடுத்துக்கொண்டு
ஆடப்பா இது நல்ல வேதையாகும்
அப்பனே ஒன்பதத்தை வெள்ளியாமே.

85. ஆமப்பா பஞ்சமுட்டி வந்தபோது
அப்பனே இந்த வெள்ளி செய்ய நன்று
ஆமப்பா இல்லாவிட்டால் பாவமாகும்
அறிவான என் மைந்தா அறியச்சொன்னேன்
நாமப்பா சொன்னபடி தப்போயில்லை
நாயகியாள் எனக்கு கரு உபதேசித்தாள்
தாமப்பா பிரம்ம சூதான சூதம்
சாற்றினேன் இடைபாகம் சரியாய்ச் சொன்னேன்.

86. சொன்னதொரு தங்கமது செம்பேயாக
சுகமான நெல்லிதனைக் கொண்டு வந்து
சொன்னதொரு இருப்பாலே அடிப்புண்டாக்கி
சொர்ணமென்ற தங்கத்தைத் தகடு தட்டி
சொன்னதொரு நெல்லியிட சாற்றாலப்பா
சுருக்கிடுவாய் ஒரு ஜாமம் பிசகாமல்தான்
சொன்னதொரு பச்சிலையை அரைத்து நீதான்
சூட்சமுடன் மூன்று புடம் போட்டிப்பாயே.

87. போடப்பா புடமூன்று போட்டபின்
புகழான வழலையது செம்புமாகும்
தேடப்பா அச்செம்பு பத்துக்கொண்டு
திறமான வெள்ளியது உருகும்போது
நாட்டப்பா அதிலிடவே வேதையாகும்
நன்றாக கைமுறையாய்ச் செய்துகொண்டு
ஆட்டப்பா செகஜால மாடலாகும்
அப்பனே ஒன்பதனை இதுவேகாண்.

88. காணப்பா முலைப்பாலைக் கறந்து வந்து
கருதிய பாஷாணமதிலே கட்டும்
காணப்பா கண்டவர்க்கு விள்ளாதே நீ
கசடருக்கு சொல்லாதே கருதிப்பாரு
காணப்பா செம்புதனில் குடுக்கபோது
கடுத்தமாய்ப் புகையாமல் உருக்கிச்சேரும்
காணப்பா இந்த முறை செய்துபாரு
கறைகண்டன் திருவருளால் வயது பத்தே.

89. பத்தாகும் திங்களப்பா சென்ற பின்பு
வரையான தேவியுட கிருபையாலே
பத்தாகுந் திங்களிலே கர்ப்ப முத்தி
பாலகனைத் தான்பெறுவாள் அப்பா கேளு
பத்தான திங்களிலே பிறந்த பாலன்
பாமணிட அருளாலே பரிசித்தானே.
பத்தான திங்களப்பா செல்லச் செல்ல
பாலகனை வேதையிட முறையதாமே.

90\. ஆமப்பா இந்தமுறை தப்பாதப்பா
ஆனந்தி பாதத்தை அகத்திலேத்தி
வாமப்பா உனைப்போல சித்தரில்லை
அறிவாலே வாலைதனைப் பூசிப்பாய் நீ
ஆமப்பா அஷ்டகர்ம வாத சித்தி
அப்பனே யோகமொடு கெவுன மார்க்கம்
ஆமப்பா ஞானமெல்லாந் திறந்து போச்சு
அஞ்செழுத்தால் சிதம்பரத்தை பூசை பண்ணே.

91\. பண்ணப்பா சிதம்பரத்தின் மகிமை கேளு
பாலகனே ஐயஞ்சு அறையதாகும்
கண்ணப்பா பூசித்துக் கடாட்சம் பெற்றேன்
கைமுறையாய் பாலகனே நீயும் பூசி
எண்ணப்பா வரைதோறும் அஞ்செழுத்தை
மாறியபின் அகாரமுதல் ஓங்காரமைந்தும்
எண்ணப்பா சிவபீசம் சத்திபீசம்
தயங்காதே ஐந்தெழுத்து உயிரெழுத்தாமே.

92\. ஆமப்ப சிதம்பரத்தை பூசித்தேற்ற
அரகரா காமியங்கள் அகன்று போகும்
போமப்பா இருளான மாய்கை யெல்லாம்
புத்திரனே இரவிகண்ட பனிபோலப்பா
சாமப்பா மாய்கையென்ற மருள்களெல்லாம்
சஞ்சீவியானாலும் இதற்கீடுண்டோ
வேமப்பா ஐந்தெழுத்தும் வெள்ளிபோல
வெந்துருகும் மாய்கை யென்ற மலமும் காணே.

93\. காணப்பா வாலையுட வெப்புஞ்சொன்னேன்
கருவான குருமுடிக்கும் பாகஞ்சொன்னேன்
தோணப்பா செந்தூர குருவின்பாகம்
சுளுவான ஜெய நீரின் பாகஞ்சொன்னேன்
வீணப்பா என்று சொல்லி நினைத்தாயானால்
வெகு சாபம் உனக்கு வந்து பிடிக்கும் பாரு
நாளப்பா சொன்னதெல்லா மிந்த நூலில்
நயமாகக் காட்டினேன் தெளிந்து பாரே.

94. தெளிந்து நீயவர்குணத்தைப் பார்க்கும்போது
செப்புகிறேன் திருடருருட திறங்களெல்லாம்
வறிந்து நீ நூல் படிக்கில் ஒவ்வொன்றாக
மௌனம்போல் திருடரவர் வருவாரெட்டில்
களிந்து நீ சொல்லாதே குருவையப்பா
நலம்பெறவே சரக்கின் முறை அரைப்பு பாகம்
ஒளிந்து நீ குருமுறையை மாரி மாரி
உத்தமனே காட்டாமல் ஊட்டியாட்டே

95. ஊட்டயிலே இடைபாகம் குருவின்பாகம்
ஊதயிலே வருப்பு முறை ஊணிப்பார் பார்
நாட்டயிலே குரு தொழிலே நன்றாய்ப் பார் பார்
நன்றான சித்தர் பதத்தைப் பார் பார்
நீட்டயிலே நவலோகம் வாங்குறதைப் பார் பார்
நினைவாக புடமுறையை நிலையாய் பார் பார்
ஆட்டயிலே குளிகையுட சாரணையை பார் பார்
அங்கங்கே கரு மறைத்து ஆட்டு ஆட்டே

96. ஆட்டையிலே பார்த்து எல்லாம் அறிந்துகொண்டேன்
என்று சொல்லி அப்பால் செல்வான்
நாட்டையிலே ஒன்றொன்று தப்பி
நலமிழந்து தொழிலொன்றும் நன்றாகாது
ஊட்டையிலே மறந்தேனோ குருதப்புண்டோ
ஊதுகிற வரிசையிலே உளரினேனோ
கூட்டையிலே குறிதப்பி போட்டிட்டேனோ
கோர்வை தப்பிப்போச்சுதென்று கூறுவானே.

97. கூறுகின்ற சீஷரை நீ சேர்க்கவேண்டாம்
கோடிதன மீந்தாலும் கும்பிட்டாலும்
மாறுகின்ற புத்தி கண்டால் முகம் பாராதே
வாதமுண்டோ இல்லை என்று வழியையேபோக்கு
தேறுகின்ற புத்தியுள்ள சீஷனானால்
திருட்டுவகை பிரட்டுவகை செய்யமாட்டான்
ஆறுகின்ற குணம் பாரு வணக்கம் பாரு
அந்த குணம் கண்டு நீ அணைத்திடாயே.

98. அணைத்திட்டேன் இப்படியே பார்த்துப் பார்த்து
அன்பான புலத்தியனே அனலை ஈந்தேன்
குணத்திட்டம் பார்த்த பின்பு கற்பம் ஈந்தேன்
கொஞ்சி அவன் உரைத்தபின்பு குளிகை ஈந்தேன்
துணைத்திட்டம் தப்பாமல் கௌனவீதி
சொட்டோடேஆட்டிவிட்டு துரையும்சொன்னேன்
இணைத்திட்ட சித்தர் முன்னே பேசிக்கொண்டு
என் பிள்ளை சுந்திரனும் வந்தார் காணே.

99. வந்தாரே பொய்கைதனில் இருந்தேனப்போ
பகுத்தான பதினெண்பேர் தானுங்கண்டு
தந்தாரே அருளொடு பொருளும் ஈசன்
சவுக்கார வித்தையுட சார்வும் சொன்னார்
ஈந்தார் பார் புலஸ்தியனே நன்றாய்ப் பாரு
எடுத்தாட நந்தீசர் எரித்து போட்டார்
பந்தாகும் குளிகை ஒன்று வைத்துக்கொண்டு
பரந்தாடு கூட்டினின்று பழகினாரே.

100. பழகினதோர் நந்திக்கும் அடியேனுக்கும்
பரியாச சண்டை முன்னே பழக்கமுண்டு
தழுகினதோர் எனையழைத்து சிவனுஞ்சொன்னார்
சகலமுறை கைகாட்டித் தந்து ஆண்டார்
இழுகினதோர் சேற்றுக்குள் கம்பப்போல
இடித்திடித்து சோதித்தே ஏழுலட்சம்
புழுகியதோர் மூலத்தில் நந்தி சொன்னதெல்லாம்
போக்கெல்லாம் பார்த்துரைத்து பொங்கினேனே.

101. பொங்கியுற்றே கொள்ளாமலீந்த நூலை
போக்கோடேமூன்றுகாண்டம் புகட்டினேன்யான்
தங்கியுற்றே பொய்களில்லை கபடமில்லை
தவறில்லை ஒன்றுமில்லை சாற்றினேன்யான்
அங்கியென்ற மூலத்தில் ஆசான் சொன்னார்
ஆத்தாளும் அப்படியே அருளிச்செய்தார்
கெங்கையென்ற தாயாரை சடையில் வைத்தோன்
கேள் என்று சொல்லி களிப்பித்தாரே.

102. கிளப்பித்த குருவான சிகார நாதன்
கெடியான தாயாரும் வகாரசக்தி
நாளப்பா இந்தரெண்டும் ஒன்றாய்க்கூடி நிற்கில்
நந்தியென்ற குருவாச்சு நாமமப்பா
முளப்பித்த ஞானியென்று பேருமாச்சு
மூதண்ட சித்தரென்ற பேருமாச்சு
உளம்பித்த விட்டகுறையாலேயாச்சு
உத்த குரு நாதனென்ற உண்மைதானே

103. உண்மையுள்ள குருபதத்தில் தொண்டு பண்ணி
ஓடிமுன்னே கேளாதே ஒன்றுமாகா
வண்மையுள்ள குணங்கண்டால் தானே செப்வார்
வாய் திறந்து கேட்டதனால் கேட்டதில்லை
தன்மையுள்ள குணமான ஏவல் கேளு
சங்கல்பம் துன்மார்கம் சண்டை போக்கு
நுண்மையுள்ள புத்தி கொண்டு காரு காரு
நோக்கறிந்து வார்த்தைதனைக் கண்டு பேசிடாமே

104. பேசிடவே காலம் வந்து நேர்ந்ததானால்
பேறான மூலத்தை பேணிச் சொல்வார்
ஆசிடவே வங்கென்று உள்ளே பூரி
அப்பனே சிங்கென்று மூலம் கும்பி
நாசி நுனி நடுவணையில் இருந்து பாரு
நல்லதொரு தீவினைகள் நாசமாகும்
கூசிடவே ரேசகந்தான் வெளி கொண்டாடும்
குமுறே உள்ளே பூரித்துக் கூடே

105. கூடுவது எவ்வாறு எப்போவென்று
கொழுகி நின்று அலையாதே கூறக் கேளு
நீடுவது அன்னமறை தண்ணீர் கால்தான்
நிலைக்க உண்ணு ஒரு பொழுது நீதானப்பா
ஆடுவது இச்சத்தியங்கள் அப்பா ஆடு
வுதித்தேறி வந்த மிது போதம் போதம்
தேடுவது வெற்றி அலை மூலஞ் சித்தி
சிவன் சத்தி இரண்டுமொன்றாய்ச் சேர்ந்த சித்தே

106. சித்த சத்து சேர்ந்ததல்ல இரண்டு மல்ல
சிறப்பான முத்தியிது செப்பக்கூடா
நித்த சுத்த புத்த முத்த நினைவுமல்ல
நிராகார நிற்குணமாம் நேர்வுமல்ல
அத்த சுத்த நிஷ்களத்தின் ஆகியல்ல
அவ்வென்று மவுனமுற்று மூலம் பார்த்தால்
பத்த சுத்த நிராகார படிகம் போல பார்க்கிறதும்
பாராதும் இரண்டும் போமே

107. இரண்டாக நின்றதப்பா வாசிதானும்
நிறத்துடனே ஒன்றுச்சி அதுவும் போச்சி
பண்டாக பார்க்கிறதற்கிதுவே மார்க்கம்
பார்க்கையிலே கர்ப்ப முண்டு பாரு பாரு
தண்டான அடி முனையாம் ஞான யோகம்
சார்ந்தவர்க்கு அரசான யோக மாகும்
நன்றான அகாரத்தை உள்ளே பூணி
நலம் பெறவே சிகாரத்தை ஸ்தம்பித்தோங்கே

108. ஓங்கையிலே நினைவாக ஓங்கு ஓங்கு
ஒருகடிகை இரு கடிகை நின்றதானால்
வாங்கையிலே பளிச்சென்று மூலத்தே தான்
மயங்கியதில் புக்கிடிலோர் வருஷம் நாளாம்
பாங்கையிலே இது உறைத்தாலாகும் பாரு
படிப்படியாய் நிமிஷத்தில் பாங்காய்த் தோணும்
தேங்கையிலே குளிர்ந்த மதிவெண்மை ஞுதவிந்தும்
தேகமுமே பொன்னிறம் போல் சிறக்கும் பாரே

109 சிறப்பான சிவயோகம் என்றும் பேரு
சேர்ந்து நின்ற குண்டலிதாயென்றும் பேரு
நிறப்பான வாசி என்றும் இதற்கே பேரு
நேரான சுழியோகம் என்றும் பேரு
குருப்பான அசபை என்றும் இதற்கே பேரு
கூறக்கேள் குருபாதம் என்றும் பேரா
உறைப்பாக இதைப்பார்த்தால் ஞானம் சித்தி
உத்தமனே காயசித்தி உணர்வாய் பாரே.

110. உணர்வத்து உடலத்து யோகமத்து
ஓடுரதும் ஓடாததும் இரண்டுமற்று
சுணர்வத்து சூச்சமத்து லஜ்ஜையத்து
சொல்லுவதும் சொல்லாததும் இரண்டுமற்று
பணர்வத்து நிணர்வத்து பாசம் அத்து
பார்க்கிறதும் பாராததும் இரண்டுமத்து
நிணரத்து நிஷ்களத்தில் நிலைத்துப்போகும்
நேரான வேதையிலே நின்று பாரே.

111. பார்க்கையிலே களங்கமாய் உருகா நின்றால்
வேதைக்கு தடவிவிடு சாவதுதான் தன்னை
பாதையிது உருகிவிடும் பிறர்காணுமவ்
பணம்பெறவேசெய்துவிற்பார் பாரோர்க்கெல்லாம்
காதையிலே இன்னமொரு போக்குக்கேளு
கடிகை செருப்படி சாரு சின்னி சாரு
ஆதியிலே காரையிலை சாருமக்கு
அச்சாரு வகைகளுக்கு இலுப்பை நெய்யே.

112. நெய்தனிலே வெள்ளீயம் பலமொன்றாக
நீயுருக்கு கரண்டி தனில்தானே போட்டு
மெய்தனிலே மூன்றுசார் மூன்று மொன்றாய்
விட்டதிலே உருக்கிச்சாய் முப்பத்தொன்று
தைய்யவழி சாய்க்கையிலே சுத்தியாச்சு
தான்வெண்காரமிட்டுருக்கு வெள்ளிதானே.

113. வெள்ளியிட்டு இரும்புருக்கல் விராகனென்று
வேதைக்குத் தங்கமது விராகனென்று
துள்ளியிட்டு இரும்புருக்க முகத்தில் தங்கம்
சூட்டிடவே உருக்கு முகம் அதின் பிறகுகேளு
கள்ளியிட்டு கட்டியதோர் ஜாதி லிங்கம்
கதிப்பாகக் கொடுத்திடவே களங்கமாகும்
நள்ளிட்ட களங்கமதில் வெள்ளீயத்தை
நாட்டிடவே பத்தரையும் காணும்பாரே.

114. காணுமடா வங்கங்குத்தி ஊதிப்போடு
கடைசியிலே இன்னுமொரு வகையைக்கேளு
பூணுமடா வெடியுப்பு களஞ்சி யொன்று
புகழாக ஆடுதற்கு வகையைக்கேளு
ஆணுமடா சீருநீரு இரண்டையும் தான்
அரைத்து வில்லை சிறுகுகையில் வைத்தோடுமூடி
நாணுமடா சீலைசெய்து புடமிடப்பா
நவாச்சாரம் வெடியுப்பு கட்டிப்போச்சே.

115. கட்டியதை குழிக்கல்லில் இட்டுக்கொண்டு
கர்ப்பூரம் கழஞ்சியரைநாகங் கூட்டி
எட்டியரை கழஞ்சி பச்சை சாரமீவாய்
ஆவின்கொழுப்பு சற்றே கூடவிட்டு
கட்டினதோர் கட்டியைத்தான் காண்டியிலிட்டு
கனலிலேதான் வெதுப்பி
கழஞ்சிசெம்பு கட்டிடும் மஞ்சாடியிட்டு
செம்பு மூன்று ஏழுவெள்ளி சேர்க்க மாத்தாறு
தானே.

116. தானான ஈயமொன்று நாக முக்கால்
தாய் முக்கால் பிதா முக்கால் துருசுமுக்கால்
ஏனை பழச்சாறு விட்டரைத்து
ஈயத்தைப் பொதிந்து இரண்டுசீலைசெய்து
மானனகோழியுட புடமிட்டெடுத்து
மஞ்சாடி யிவை வெள்ளி நாலுமாக
உருக்கிப்பார் சித்தியாகுமப்பா
உத்தமனே நிறங்கருத்தால் காரங்குத்தி உருக்கே.

117. உருக்குமாங் கழஞ்சியது கட்டு சூதம்
ஒரு கழஞ்சி அரிதாரம் சேர்த்து நன்றாய்
கட்டினதோர் லிங்கமது கழஞ்சியொன்று
இவைஇரண்டும் செம்பருத்தம் பூ சாத்தாலாட்டி
மருக்கவே குகைபிடித்து கட்டின சூதம் வைத்து
செம்பருத்தம் பூச்சாறு மூன்றுதுளி விட்டு
கருக்கமேல் மூடி மண்குகைக்குள் வைத்து
கருத்தப்பட்டிஞல் சீலை இரண்டுசெய்யே.

118. சீலைசெய்து சிறு புடம் போட்டுப்பாரு
செந்தூரம் வெள்ளி நாலுக்கு ஒருமா சுடு
ஏலமென்ன மாத்ததுதான் ஏழுரையுமாகும்
இனியென்ன கட்டி நாகம் உருகும்போது
மாவென்ன மேனிச்சார் சுருக்குத்தாக்கு
மைந்தனே செந்தூரமாகும்பாரு
பாலென்ன கழஞ்சி வெள்ளி உருகும்போது
பார்த்தெடுத்து மஞ்சாடி செந்தூரமீயே.

119. ஈயவே பத்துரை தாளுகும் பாரும்
இன்னுமொரு துருசுக்கழஞ்சிக்கே தான்
மாயவே பூரமது கழஞ்சி இரண்டு
மஞ்சாடி சவ்வீரம் கழஞ்சி ரெண்டு
சங்கு சுட்ட நீறுடனே கழஞ்சி இரண்டு
எலுமிச்சம் பழச்சாரிட்டு நீத்தி
ஆயிந்த மருந்து இரண்டும் பொடித்துச் சுண்ணம்
தண்ணீராயிருந்ததிலே சுருசுவையே

120. வைத்து வைத்து ஐந்து நாள் காய வைக்க
மகா திரு நீல கண்டர் வெள்ளையானூர்
வெத்தியடா இந்த நீர் வேதைபாரு
வெகு சுருக்கு சரக்குகளில் கொடுத்துப்பாரு
ஒத்ததொரு பொரிகாரக் கட்டைக் கேளு
ஒருகழஞ்சி பொரிகாரம் நெல்லி கெந்தி
அத்துருசு மூன்று பங்கிட்டு அயக்காண்டி தன்னில்
அப்பனேஉருக்கி வார்த்துப்பார் கட்டிக்காரமாமே

121. காரத்தின் கட்டி தன்னை முட்டைக் கருவிலிட்டு
காயவைத்து மூன்று நாள் பிரட்டி வைத்து
காரத்தைக் கருவிலிட்டு கொதி கிளம்ப
காரத்தை வெயில் காய்ந்து ஈரமத்து
மறுபடியும் இரண்டுநாள் காய்ந்த பின்பு
இருகவிது கட்டிவிடும் இதை எடுத்து
சூரத்து வெள்ளி நான்கு காரமொன்று
சூட்டிடவே தங்கமொன்று சேர்திபாமே.

122. ஆகுமே அயச் செம்பு மஞ்சாடி ஒன்று அதில் தங்கம்
கழஞ்சி யொன்றும் உருக்கிக் கொண்டு
கெந்திபத்து மஞ்சாடி மனேசிலை அவ்வீதம்
பழச்சாத்தால் அரைத்துப்பூசி ரவியில் காய்ந்தால்
ஆகுமே பதினறு புடமும் போட்டு அடக்கமாம்
வெள்ளிக்கு மஞ்சாடி ஈய
நாகுமே பொன்மாத்து எட்டு காணும்
நன்றாக இன்னுமொரு வாதங் கேளே.

123. கேளே நீகெந்தியது பலமும்பத்து கேள்
ரசம்பலமொன்று குழிக்கல்லிலிட்டு
வாளே எருக்கம் பழப்பிலை வாட்டிசார் பிழிந்து
ரசமரைத்து ரவியில் வைத்து
நாளே நீ நாற்பது நாள் வைத்தெடுக்க நலமான
எண்ணெவரும் தைலம் போல
மீளே நீ பதனம் பண்ணி வைத்துக் கொண்டு
அத்தைலம் வெள்ளியுட தகட்டில் பூசி
எருக்கிலையின் பழுப்பதனில் பொதிந்து கேளே.

124. பொதிந்த தொரு உமிகலந்து புடமுமிட்டு
துத்திநாகமொரு கழஞ்சிகூட்டிவைத்து
விரிந்தசெம்பு தகட்டினிலே பூசி பூசி
மிக்க உமிக்காந்தலிலே போட்டுப்பாரு
அதிந்த கெங்காசலைக்குப்பி தைலந்தன்னை
அடைத்திடு நீ எந்தனெருங்களையும் வாரி
உளிவைத்து இடித்ததனை பிழியதண்ணீர்
நவாச்சாரம் [கருப்புகட்டியிடத்தண்ணீராமே.

125. தண்ணீரில் வட்ட துத்தி உள்ளிகட்டி
தாளிடித்து பிழிந்தசார் தன்னில் சூதம்
விண்ணிடவே மூன்றுநாள் ஊரவைத்து
வெண்ணெபோலாகுமது இலையரைத்து குகைதான்
கண்ணரச மதில் வைத்து புடமஞ்சிட்டால் [செய்து
கனலான தீக்குநிற்கும் புகையாதையா
வண்ணமுள்ள இரும்பியம்வைக்கக் கேளு
மக்களே பொரிகாரங்கழஞ்சி இரண்டே

126. களஞ்சான சிறுபூனைச்சாறு ஆடுதீண்டா இலைச்சாறு
ஒரு கழுதை நீருமோ வரை அரைப்படிதானப்பா
மிதமூன்று ஒன்றரைப்படியுஞ் சேர்த்து
இஞ்சமே மண்வெட்டி பரக்கக்காய்ச்சி
இத்தூளைத் தந்திரமாய்த் தூக்கித்தாக்கி
முளைஞ்சமே மூன்றுதரம் நீரில் முக்கி
முக்கியே எடுக்கவே ஈயமாச்சே.

127. ஈயமதை எடுத்து வைத்து சேர்மானத்திற் கெல்லாம்
இயல்பாக சேர்த்துருக்கில் வெள்ளிநாலும்
செம்பாறும் சேர்த்துருக்க மாத்துதானும்
சரியாச்சு இன்ன மொன்று நாய்வேளைச்சார்
பாகல்சார் புகையிலைச்சார் மூன்றும் சேர்த்து
தோயமே நாகமது சுருக்குத்தாக்கு
தாத்தனுகம் கட்டுமடா சொல்லொணுதே.

128. சொல்லவே ஒரு கழஞ்சி லிங்கமப்பா
சுகமான கல்சாரம் கழஞ்சி கால்தான்
வெல்லவே சவ்வீரம் கழஞ்சிகால்தான்
முட்டையுடக் கருவூத்திக்கூட்டித்தானும்
அல்லவே கூர்வதெல்லாம் விரவிக்கொண்டு
வெல்லவே ஓடுமேல் வேறே ஓடுமூடி
சீலைமண் ஏழுசெய்து உலர வையே.

129. வைத்துமே சட்டியொன்றில் மணல்தானிட்டு
சீலைசெய்த ஓட்டதனை
வைத்துமேலே அதுமேலே மணல் கொட்டிமூடி
சீலை மண்செய்து உலத்தி அடுப்பிலேற்றி
பெத்த பத்து நாழிகைதான் ஆவாரம் விரகால்
கமலமாய்த் தீயெரித்து ஆரவைத்து
ஐயவே இரக்கிப்பார் மஞ்சள் மெழுகுபோல
ஆகுமடா பின்னுமொரு வாதமேது
துய்யமெழுகுதனையெடுத்துச் சூட்டிப்பாரு
சேர்வையிலே அதுவயது தோணும் பாரே.

130. பாரடா மால்தேவி பலமோ இரண்டு
பரிந்து ரசம் பலமோ நாலுமாக
ஆரடா அரிதாரம் பொரித்துக்கொண்டு
அப்பனே முள்ளெலியின் வாயில் போட்டு
சேரடா ரசத்தை விட்டு கஞ்சா சாறுவிட்டு
திரும்பவதைவாய் தைத்துக் கட்டிக்கொண்டு
தீரடா வெள்ளீயம் உருகும்போது
திரமாக மணியையிட நீற்றுப்போமே.

131. திடமான மணியினுட அருமை கேளு
திரைச்சீலை பந்தலிட மணிதங்காது
இடபாக வேடேதுக்குதேதுண்டோ
எதிருளி தானேது மணிக்குமேதான்
படமான விடமில்லை பாரு பாரு
பார்வையில்லை மணியுமடா பார்வையாச்சே

132. ஆச்சு இரும்பு நாலுடனே செம்புநாலு
அதையுருக்கி குகைபண்ணி திரட்டிக்கட்டி,
வாச்சவட்டச் சாரணையை யரைத்துக்கொண்டு
மைந்தனே இரும்பு புகைக்குள்ளே வைத்து
வச்சத்த நாகத்தைக் கூட்டிவைத்து
இன்னுமந்த சாரணையை அரைத்து வைத்து
நாகசெம்பு கிண்ணத்தால் மூடி இரண்டு
நாழிகைதான் கொல்லனுலை பாச்சியூதே.

133. ஊதிடவே மேல்கிண்ணம் மருந்து பத்தும்
உள்ளிருக்கும் அதையெடுத்து கொஞ்சம்கொஞ்
மோதிடவே நவாச்சாரம் சேர்த்துருக்க [சம்
முன்மணிபோல் மணியாக இருக்குமப்பா
வாதிடவே சுத்தி புது சட்டிக்குள்ளே
தாணிக்காய் பத்து கடுக்காய் மூன்று
சூதிடவே மத்தஞ்சார்விட்டு மத்தித்து
பானமத்தங்காய் குடைந்து வையே.

134. வைத்ததைந்து புடம்போட அட்டையாகும்
மாருகம் நின்றிடைக்கு ரசமும் சேர்த்து
உத்தமனே தொந்தித்து குடகரியில்வைத்து
உருக்கு இடை போகாது பார்த்துக்கொள்ளு
இந்திடைக்கு ரசம்சேர்த்து கெந்தி மூன்று
வாழையுட பழத்தின்தோல் பலமோ ஒன்று
சால சரக்கெல்லாம்தான் கல்வத்திட்டு
இடித்துமே மெழுகாகல் கலசத்திட்டே.

135. இட்டேதான் பாதாளத்தைலமிறக்கிக்கொண்டு
இத்தைலங் காசிடைதான் ரசமோடே சேர்த்து
மத்திக்க அந்த ரசம் வெண்ணெயாகும்
பானுவினில் காயவைத்து இனிமேல் கேளு
தொட்டகெந்தி சுத்திசெய்து ஒருபங்குக்கு கூட்டி
இந்தகத்தைலம் விட்டரைத்துக்கொண்டு
கெந்தகத்தை மட்டமாய் பதினெட்டு பங்கு
மறுவொருபங்குதனை குளிகை பூசே.

136. பூசியே பதினெட்டு புடமும்போடு
செந்தூரம் ரவிபோல நாகமாச்சு
ஏசியே நாகமாம் செந்தூரத்தை எடுத்தெடுத்து
ஏத்திப்பார் துருசு வேகம்
தூசியே ஆணியப்பா சுன்னமெல்லாம்
தொடு முன்னே பெண்ணுக்கும் கூட்டிப்பாரு
ஆசியே ரசவாதம் செய்வோர்க்கெல்லாம்
ரசக்குளிகை இல்லாமல் ஆகாதப்பா.

137. ஆகாது புளி கடலை கிழங்கு பலம் பத்து
அரப்பொடி பலம் ஒன்று வெண்காரம் விராகன்
போகாத கிழங்குடனே வெங்காரத்தைஅரைத்து[பத்து
ஏழுபங்கில் ஒருபங்கை அரைப்பொடியில் பிசரி
ஏழுதரம் உருக்கச் செம்பாம் [உலையில் வைத்து
இதை எடுத்து தூய்யானுக்கு ஒருமா ஈய
[மாத்தாரமே.

138. மாத் தென்ன கெந்திச் சாருவார்த்தரைத்து
வெத்திலேயில் பொதிந்து தீயில் பார்த்தென்ன
வைத்த உடன் செட்பு மாச்சு
பாவகமாய் இன்னு மொன்று பகரக்கேளு
சாத்தென்ன வருப்பு குமரிச்சாரு
தான் விட்டு சாமமரைக் கல்லுப்புக்கு
பூத்தென்ன கவசமிடு சீலே செய்து
புதுச்சட்டிக்குள் வைத்து வெத்திலேயின் தாளே.

139. நாலுலத்தி சட்டிக்குள் இட்டு வைத்து
தூள் கொண்டு மூடி மறசட்டி மூடி
நாலுலத்தி சீலே செய்து எரிசாமந்தான்
நலமான நடுப்பிறக்கி சாமமாறில்
வேருரைத்த செந்தூரம் ஆருமையா
விதமாக அதைபுமினீர் விட்டரைத்து
பிதரைத்து வில்லே தட்டி பீங்கானில்
வைபனியிலேஜெயநீராம் இந்த நீரே

140. நீரிதிலே லிங்கத்தைத் துவட்டி தீபத்தில் வாட்டி
நின்றாருகும் அதைக் கதிரில் குத்தி
ஜெயநீரில் ஆர்த்து வைத்து அஞ்சு தரம்
மெழுகாய் வாட்ட அதில் இரண்டு விராகனிடை
[த்தங்கரேக்கு
ஆர்த்து வைத்து விராகனிடைபடி ஜெயநீரில்
அதில் குத்தி பொதிந்து தீபத்தில் வாட்ட
ரேகிக்கும் இரண்டு மொன்றாய்
வெள்ளி பத்துக் கொன்றீயே.

141. ஈய எட்டு மாத்தாச்சி இன்னுங்கேளு
இரும்பாம்பொடி தானும் மாதளம்பாலில்
பீய நாள் மூன்றப்பா அரைத்தரைத்து உமிநீரால்
ஆறுகடினக அரைத்துருட்டி
தூய தொரு குகை போல செய்து கொண்டு
சொல்லாத மணி முத்து பருப்பு குகையில்
[வைத்துக் கேளே

142. கேள ரப்பொடியிட்டு நின்ற பங்கு கீழிட்டு
மருந்துமே மேலுமிட்டு
நீராகு மிப்படியே இரண்டு நேரம்
நீயுருக்கச் செம்பாகும் அந்தசெம்பை
வேலுருக்கி வெள்ளியிட்டு உருக்கிப்பாரு
விசைதரியா மாத்தப்பா வேகமாகும்
வாளுருவிவெட்டுமடா இந்த வாதம்
வாய்வேற்ற வாதமுறையாகும் பாரே.

143. ஆகுமே கெவுரிக்கு கருவங்கத்தையப்பனே
பழச்சாரு விட்டரைத்துப்பூசி
போகுமே அதன் மேலே துருசுக்கும் பார்
புகழான பழச்சார் விட்டரைத்துப் பூசி
மேருமே அதன் மேலே பழச்சார் விட்டு
மிகக்கல்லுப் பரைத்துப் பூசுபூசு
சாகுமே ரவியில் முப்பது நாழ்வைத்து
சட்டியிலே உப்பிட்டு அதின் மேல் வையே.

144. மேலுமந்த உப்பிட்டு வைத் தெரிப்பாய்
சாமம்மீண்டிரக்கி வெள்ளி செம்புமட்டுஞ்சேர்ந்து
ஞாலமிதில் பத்துக்கு ஒன்று தாக்கி
நல்வயது ஒன்பதரை நாடிப்பாரு
ஏலுடைய பாகமிது என்னசொல்வேன்
இப்படியே வாதமடா இருந்து பாரு
ஜோலியத்தவாதமடா ஜாலவாதம்
சுருக்கமடா பெருக்கமடா துப்பு துப்பே.

145. துப்பாக எழுத்தாணி இலையின் சாத்தில்
சூடுகிறேன் அரப்பொடியை நாள்மூன்றிட்டு
பாரப்பா குகையில் இட்டு உருக்கச் செம்பாம்
பரிபாவை வெண்காரம் இட்டு உருக்கு செம்பாம்
வேளப்பா முத்துருக்கன் சாற்றில் கேளுவேரோ
அரப்பொடியூரப்பத்து நாளும்
காரமிட்டுருக்கச் செம்பாம் பார்த்திடாயே

146. பார்த்திடவே அரப்பொடியை பத்து நாளும்
கண்டுதேச் சுவரொட்டிச் சாற்றிலே தான்
மாத்திடவே வெண்கார மிட்டுருக்க
மைந்தனே குகையிலே வண்டு போல
தோத்திடவே செய்பாகும் பாரு பாரு
சித்தெல்லாம் இதையாட தேரு தேரு.
வேறொருக் காலா காது கண்டு பாரு
வேதைக்கு இச்செம்பு வேதையாமே.

147. வேதையடா இன்னுமொரு மார்க்கம் கேளு
நீராக அறப்பொடியை விதமாய்ப்பாரு
போதியே செவ்வகத்தியிலைச் சாரப் பட்டைச்
சாறுபடி நாள் பத்து ஊரப்போடு
வாதியே வெண்கார மிட்டுருக்க
அந்த மென்ன முன்போல செம்புமாகும்
தேகியடா வாதமிது செய்து பாரு
சித்திக்கும் செம்புவடா ஜெகஜாலத்தே

148. ஜாலவித்தை வெட்டுண்ட தலையோட்டுள்ளே
தான் குடைந்து இரண்டுபலம் ரசத்தினோடே
மேலுமந்த இரண்டுபலம் வங்கமிட்டு
மேல் மூடி ஓடிட்டு மூடிக்கொண்டு
சீலைமண்செய் அரையளவு புடத்தில் போடு
திரும்ப எடுத்துருக்கிப்பார்க்கும் போது
சாலமாய் களங்கத்தில் கொடிக்க வாங்கிப்போகும்
தப்பாது சரிகை வெள்ளி மாறிப்பாரே.

149. மாறியந்த மண்டைதனை உடைத்து மூளை
வழித்தயத்தின் கரண்டியிலே வைத்துக்காய்த்தால்
மீறியந்த வெடியுப்பு வாங்குமட்டும் மிகக் கொடுக்க
அதை எடுத்து வெள்ளீயத்தில் ஏற்றிடவே
மாற்றெட்டு காணுமப்பா என்ன சொல்வேன்
இந்த வகைப் போக்குக்கெல்லாம்
தேறி மனமுறைத்தவனே செய்வான் பாரு
சித்தாந்தமாம் யோக வாதந்தானே

150. தானென்ற துத்தத்தின் கட்டு கேளு
தனியண்டோடு பலம் இரண்டுவாங்கி
மானென்ற கருரோமம் பலம் இரண்டப்பா
மையிர்தனையே பொடி பொடியாய்க் கத்தரித்து
ஏனென்ற பொடி கழுவிக்காய்ந்த ரோமம்
உத்தமமாம் பலம் இரண்டிருக்கவேண்டும்
மானென்ற மயிரண்டத் தோடு இரண்டு
ஆகவே பலம் நாலு பொடித்துக் கொள்ளே.

151. பொடிக்குத்தி மண்பரணையில் அடைத்துக் கொண்டு
பிரம்பு கொண்டு கத்திவாய் மூடிக்கொண்டு
வடிவுற்ற பீங்கான் கீழ் வைத்துக்கொண்டு
மைந்தனே குழித்தைலம் வாங்கு வாங்கு
விடிவுற்ற மடல் துத்தம் சுருக்குதாக்கு
மெழுகாகும் நாலு செம்பு வெள்ளியாறு
படி சேர்த்து துத்தமது ஒன்று சுய
பழுக்கு மடா ஐந்தாறு பயன் சொன்னேனே

152. சொன்னேனே மால் தேவி பலமோ ஐந்து
சுகமாக அயத்தேவி பலமோ நாலு
பொடிபண்ணி மேதிக் கொம்புள்ளடைத்து
மாம்பட்டைச்சாறு ஒரு சிறங்கை விட்டு
கன்னேனே மாங்குச்சால் ஆப்படைத்து
சீலை மண் செய்து மே ரவியுலர்த்தி
சாண்புடமும் போட்டு நீ எடுத்துக் கொள்ளே.

153. புடமாறி எடுத்து அதை நிறுத்துப்பார்த்து
பொன்போல அந்திடைக்குத் தங்கஞ் சேர்த்து
திடமாக இருக்கையிலே சரியாய் நிற்கும்
செப்பினேன் ரசநீரு செப்பக்கேளு
குடமான ரசத்தை குழி கல்லிலிட்டு
கொட்டான கரந்தைச் சாற்சாமமாட்டி
அடைவாக அரைத்து வில்லை காயவைத்து
அதின் பிறகு புடம் போட சுன்னமாச்சே.

154. அச்சிந்தரசமதுதான் விராகன் ஒன்று
அப்பனே கெந்தி அவ்விடையேயாகும்
பூச்சிந்த மாம்பட்டை முற்றினதாக சார்பிழிந்து
மூன்று சாமம் அரைத்துக்கொண்டு
வாச் சென்ற கலயத்தில் யிட்டு மூடி
சீலை செய்து குப்பையிலே ஐம்பத்தோர்நாள்
பேச்சென்ற புதைத்து விடு பிறகெடுத்து
புடங்கோழி புடமிடவே செந்தூரம்பாரே

155. பாரப்பா வெள்ளிபத்தில் கொடுத்துப்பாரு
பக்குவமாம் செந்தூரம் ஒன்று தானே
நேரப்பா மாத்தாச்சு இன்னுங் கேளு
நிறமான கெந்திபல மைந்து கேளு
காரப்பா சூதமது பலமு மஞ்சு
கலசத்திலிட்டுமே சட்டி மூடி
வேரப்பா குழியிலிட்டு மணலையிட்டு
வெள்ளாட்டுப் புழுக்கையுமே நாழி போடே

156. நாழியிட்டு தீயிட்டு இப்படியே கேளு
நாள்தோறும் தினம் புழுக்கை நாழி வீதம்
மாழியிட்டு எரிபோடு நாற்பத்தைந்து நாள் தான்
மறுபடியும் எடுத்துப்பார் செந்தூரத்தை
வாழியிட்டு சிமிழியிலே பதனம் பண்ணு
அதை எடுத்து செம்பினிலே மாட்டிக்கொண்டு
பூழியிட்டு கொடுத்திடவே மாத் தெட்டாச்சி
பூபதியாம் செந்தூரம் பூட்டினேனே

157. பூட்டிப்பார் இன்னுமொன்று புகலக்கேளு
பூதலத்தில் இரண்டு கைபிரமாணத்தில்
ஈட்டிப்பார் பெரிய எருவாய்த் தட்டிரண்டு
காயவைத்து எடுத்து அதை வைத்துக் கொண்டு
வீட்டிப்பார் அடி எருவில் புளியம் பூவை
விரல்கனமாய் பரப்பியதில் காரீயத்தை
சூட்டிப்பார் துண்டு துண்டாக வெட்டி
சுகமான புளியம்பூ அதின் மேல் வையே.

158. முன்பாகப் பூவிட்டு அமுக்கிக் கொண்டு
மோகமுடன் துண்டு பத்தைந்து வைத்து
அன்பாக பூவினால் அமுக்கி மேலே
அதன் மேலே அந்த ஒரு எருவு மூடி-
வம்பாக இரண்டெருவும் கீழும் மேலே
மண் சீலை ஒன்று செய்து ஆரவைத்து
அன்பாக எருவுமிட்டு புளியம்பரணி
கொட்டி கெஜபுடம் போட்டிடவே துண்டு நீறே.

159. நீறாக கெவுரியது விராகன் பத்து
நீழ் கார்த்திகைக் கிழங்கில் பொதிந்து வைத்து
வீணை மறுகிழங்கால் வாயை மூடி
இரு சீலை மண்செய்து குகையில் வைத்து
நேராக உருக்கிப்பார் கெந்தகச் செம்பாம்
நீ வெள்ளி பத்திலே ரண்டு தாக்கு
ஆராக பழுக்குமடா இன்னுங் கேளு
அக்கிழங்கை கவசமிட்டு கவசங்கட்டே.

160 கட்டியே புடமிட்டு எடுத்து வெள்ளி
கணக்காக பணம் பத்துக்கு இவை ஒன்றீய
எட்டரையும் சரியாகும் இன்னமொன்றீய
செந்தூரமொன்று இயம்புவோம் கேள்
நீட்டி கண்டு தான் துவைத்து மூன்றுதரம் கேள்
உருக்கி ஈயமதில் சாய்த்து பின்னையுங் கேள்
நொருக்கியம்மியில் வைத்து இரும்பனல் சாறுவிட்டு
அரைத்திட்டு பில்லை செய்து காயவைப்பே.

161. காயவைத்துப் புடம்போடு பின்னுமிச்சாரரைத்து
இப்படியே ஏழுநாள் அரைத்தரைத்துப் புடமும்
நடம்போடு செந்தூரமாகும்பாரு [போட்டுப்பாரு
நால் செம்பு நால் வெள்ளி சேர்த்துக்கொண்டு
புடம்போடு செந்தூர மொன்றுதாக்கி
இட்டிடவே மாற்றது என்ன சொல்வேன்
புடம்போடு கோழி முட்டை நூறு வாங்கி
மைந்தனே தைலமது இறக்கிக்கொள்ளே.

162. கொண்ட பின்பு கெந்தியது பாலில் சுத்தி செய்து
கூர்மையாய் பொடித்துப் பொட்டணமும் கட்டி
அண்டத்தின் தைலமிட்டு பதமாக
கனமான சுடர் தைலம் வடிப்பாயப்பா
அண்ட வித்தை ஐஞ்சுயாத்தான பொன்னில்
தைலமிட்டால் ஆறுமாத்தாகும் பாரு
இதையெடுத்து புடம்போட மிடுக்கான தங்கம்
இடைக்கிடையும் சேர்த்துப்பார் ஏழ்மை பிழைப்பு
[காணே

163. பிழைக்கவே நாகமஞ்சு கழஞ்சு ஞதம் பெருக்கவே
கழஞ்சு இரண்டு வைத்துக்கொண்டு
அழைக்கவே நாகத்தை காண்டியிட்டு
அதையுருக்கி ரசங் கொடுத்து அம்மியில் வைத்து
இழைக்க அரை வெடியுப்பு நாலாங் காச்சல்
விட்டரைப்பாய் மூன்றேகால் கழஞ்சியப்பா
கழைக்க அரை சாமம் வாசம் வீசும்
அப்போது தண்ணீர் விட்டரைத்திடாமே.

164. அரைக்கையிலே அந்த ரசம் எடுத்துக்கொண்டு
அதின் பிறகு தண்ணீரை நிரப்ப விட்டு
உரைக்கையிலே சேமிக்கும் வடித்துக்கொண்டு
உடன் மெழுகு பதமானால் எடுத்துக்கொண்டு
வில்லை தட்டி காய்ந்து புடமிட சுன்னமாகும்
நிஜமாக பதனமாய் வைத்துக்கொண்டு
உரைத்தெடுத்த ரசத்தை சிறுபயறு வீதம்
நல்ல தங்கக் கட்டியில் ரசம் விட்டுத்தேயே.

165. தேய்க்கவே உண்டு பொன்னுந்தங்கந்தானும்
திரும்பவே ரவிகாய்ந்து தகட்டிலேதான்
சாய்க்கவே மூன்ரசத்தை பயறுவீதம்
தடவியே காயவைக்க நொருங்கும்பாரு
மாய்க்கவே மஞ்சாடி மூன்று செபபு மாட்டியே
ரவிபிரவி யாகும் பாரு
தேய்க்கவே அதை எடுத்து வெள்ளி
ஏழு செய் தங்கம் மருந்திடவே மூன்று ஈயே.

166. ஈயவே இடைகிடைதான் தங்கமிட்டு
இதில் வங்க மிட்டிருக்க ஏழு மாத்தாம்
மல்லவே அல்லாட்டால் உலையில் ஊதது
அப்பனே வேதையது என்னசொல்வேன்
மாயவே ஜாதிலிங்கம் எடுத்துக்கேளு
கருங்கோழி முட்டையிலே பணம்போல் துவாரம்
காயவே பணமிடைதான் ஒன்றரையப்பா
பச்சை நல்ல கற்பூரம் முட்டை தாக்கே.

167. தாக்கியே வெய்யலில் வைப்பாய் மெழுகுமாகும்
தபவாக மெழுகெடுத்து லிங்கத்தில் சுற்றி
ஏக்கியே விளக்கதினில் பிடிக்கும் போது மெழுகாகும்
அதில் தங்கம் கூட்டிக்கொண்டு
ஆக்கியே வெள்ளி செம்பு சேர்த்துக் கொண்டு
அப்பனே அதில் பத்துக் கொன்றுசேரு
பாக்கியமே உண்டாச்சு இனிமேலென்ன
பண்டான அரிதாரக்கட்டைக்கேளே

168. கட்டான அரிதாரங்குழிக்கல்லிலிட்டு
கருதியே சாராயம் விட்டரைப்பாய்
மட்டாக ஜாமம் ரண்டரைத்த போது வழிக்கையிலே
வேளைச்சார் மூன்று ஆவிவிட்டு
தட்டாகவில்லை ரவியில் காயவைத்து தனிநாயுருவி
சாம்பல் பாண்டத்திட்டு
சீலை மண் மூன்று செய்து அடுப்பிலேற்றே.

169. ஏற்றியே தீயெரிப்பாய் ஆவாரை கொண்டு
இருசாமம் தீயெரிக்கக் கட்டிப்போச்சு
ஆற்றியே செம்பு பத்து இவை ஒன்றிய
ஆச்சரியம் யாருடனே செப்பப்போரோம்.
மாற்றியே சேர்வதற்கு வகையைக் கேளு
மைந்தனே வெடியுப்பு புளி நவாச்சாரம்
ஏற்றியே துருசு துத்தம் சீனக் காரம்
சேர்த்தரைத்து தான்பார்க்க மெழுகுமாமே.

170. மெழுகாலே சரக்கெல்லாங் கட்டுங் கட்டும்
மெழுகுக்கு மேல் பிரயோகத்தைக் கேளு
கண் நொடிப்பாய் சுண்ணும்பு முப்பு மார்க்கம்
கொண்டரைத்து சீலையை பூசிக்கொண்டு
வழு வழுப்பு வாராமல் மெழுகு மேலே
வாகாக நாலுமிந்த சீலை மண்ணும்
கழு கழுப்பாய் பூசியே காய வைத்து
கௌதாரி புடமிடவே கட்டும் பாரே.

171. கட்டுமப்பா கிருஷ்ண துளசி சாற்றில்
கருதியரைத்திட வெள்ளை பாஷாணத்தை
முட்டுமப்பா செம்பு கிண்ணத்தில் வைத்து
மூன்றெருவில் புடம் போட புகையடங்கும்
கிட்டுமப்பா அப்படியே மூன்று பாகம்
பரணியில் வைத்துப் புடம் போட பலமாய்கட்டும்
செம்பைத்தான் குகையில் இட்டு உருகும் போது
கட்டு பாஷாணத்தை ஒன்றீய குருவுமாமே

172. குருவான கெந்திபலம் ஒன்றுக்கேதான்
கூட்டப்பா பூநீறு அரைப்பலந்தான் கூட்டி
ஆடு தின்னுச் சமூலம் மூன்று அரைத்து வில்லை
ரவியில் காய்ந்து கவசம் செய்து
போடவில்லை கலயமதால் குழிக்தைலம் வாங்கி
கெந்தி பலங்காலப்பா பூநீறு பலம் அரைக்கால்
அதையெல்லா மறைத்து [சேர்த்து
இரும்பு தகட்டில் பூசே

173. தகட்டிலே தடவிவிடு இரும்பு மாத்து
தப்பாது பத்தரையும் தானுச்சப்பா
உகட்டிலே கழுதைநீர் திருகுக் கள்ளிப்பால்
உப்பு ரண்டும் சரியாக்கி ரவியில் வைக்க
உப்பாகும் திரும்ப எடுத்து திருகுக்கள்ளிப்பால்
தகட்டிலே முன்பாகம் நாலத்தொன்று
அதிலிட்டு வைக்கவே ஜெய நீராச்சு
தகட்டிலே பாஷாணங்கட்டி வாங்கி விளக்கிலே
சுருக்கிடவே மெழுகு மாச்சே.

174. விளக்கிட்டு இரண்டு நாழிகை சுருக்கிப்போட மெழுகா
மெழுகெடுத்து நாகத் தகட்டில் தாக்கு [கும்
தாக்கியே மெழுகிட்டு மேதிக்கொம்பில்
மைந்தனே பன்னீர் பூவை யிட்டு வழக்கமென்ன
சீலை மண் ஐஞ்சும் செய்து
குருணிதான் நெரிஞ்சில் முள்ளை மேலுமிட்டே

175. மேலிட்டு ஒருமரத்து விரகு கொண்டு
எரித்துமே வாலையைத்தான் தியானம் பண்ணி
பாலிட்டு அப்பாலே போய்விடாதே
பாவகமாய் செந்தூரமாகும்பாரு
அதையெடுத்து செம்பதிலே கொடுத்தாயானால்
வெள்ளியாம் பிழைத்துக்கொள் நீ தான் பாரே.

176. பாரே நீ பாஷாணக் கட்டைக்கேளு
படு தொட்டால் வாடி நத்தைச்சூரி சாறு
சேரே நீ தலையோட்டில் கீழ்மேல் பூசி
சித்தடுப்பின் மேல் வைத்து பாஷாணங்கட்டி
சீரே நீ சுருக்கிடுவாய் கட்டிப்போச்சு [வையே
நிஜசெம்பில் ஏழு க்கொன்றீய வெள்ளியாகும்
சீராக்கி இது பெரிது பாரு பாரு
செப்பவேண்டாம் ஒருத்தருக்கும் செப்பிடாதே.

177. செப்பியே கெந்தி இருபது விராகன்தான்
செம்பழச்சார் விட்டரைத்துக்கொண்டு
அப்பவே ரவியில் வைத்து கடிகையானால்
அவை எடுத்துக்குகையில் உருக்கிப்பாரு
துப்பவே செம்பாச்சு இன்னமொன்று சொல்லவில்லை,
நன்றாக சொல்லக்கேளு
ஒப்பவே செம்பிலே கோடி வித்தை
உண்டுடா கண்டு பார் இன்னங்கேளே.

178. கேளடா பச்சைகற்பூரம் வைப்பை
கெடியான தேங்கா யொன்றதிற்கேளு
வாளடா பரங்கிப்பட்டை விராகன் ஒன்று
வாழடா கருங்குருவைவிராகன் இரண்டு
காழடா அதிமதுரம் விராகன் ஒன்று
சீரகமும் விராகன் ஒன்றே
தாழடா சந்தனக்கட்டை விராகனொன்று
தருபூலாக்கிழங்கதுவும் விராகனொன்றே.

179 ஒன்றான சாம்பிராணி விராகனொன்று
உத்தமனே லவங்கமது அவ்வீதந்தான்
நன்றான சூடன் அரைவிராகனொன்று
நாடியதோர் விராகன்பத்து சீனக்காரம்
இதையெல்லாம் பொடித்திட்டு குப்பிக்கேத்தி
குப்பிவாய்க்கு சந்தனக்குச்சி யாலடையே
அடைத்தக்குப்பிக்கு பாசிப்பயரும்
உளுந்து கோதுமையே.

180. கோதுமை சீலையிட்டு ஏழுமண்செய்
சட்டிக்குள் குப்பிவைத்து மணலுமிட்டு
இசைய ஒருகுண்டுசட்டிமேலுமூடி
கோதுமை சீலைமண் வலுவாய்ச் செய்து
மனையடுப்பில் பத்துநாழிகை எரிக்க
ஆறும்பை ஆரியபின் எடுத்துக்கொண்டு
அதில் சீனம் விராகனொன்று
பொடித்துப் போடே.

181. பொடித்திட்டு மருந்தெல்லாம் பரணியில் வைத்து
விநாயகனை பூசை செய்து வைத்துக்கொண்டு
கொண்டுமே சாக்குவிலை பொன் பொன்னாகும்
பூட்டிவிப்பாய் இன்னுமொன்று சொல்லக்கேளு
அடித்திட்ட காத்துக்கு வாயுபீஜம்
யாராலும் முடியாது வேதைபாரு
எடுத்திட்ட காரசாரஜெய நீருக்கு
இந்த முறையாருக்கும் இல்லைதானே.

182. இல்லை என்ற இடைவேணு திறமும்வேணும்
ஈணுதவாழையடி யிருக்கவேணும்
முல்லையென்ற நகைவேணும் பவழம்வேணும்
முகில்வேணும் மால்வேணும் மானம்வேணும்
வல்லை என்ற தனம்வேணும் நிறமோ தங்கம்
மாதளம்பூ சாயலிலே இருக்கவேணும்
நல்லறிவு மதியுமிருக்கவேணும் தோகையிவள்
எவ்வர்ணம் தோணும் பாரே.

183. பாரென்ற சன்னியாசி தவசிமாதா
சுகமான தீட்சை எட்டும் இரண்டும் வேணும்
வாழ்வென்ற விதியிருந்தால் பூபதியும்வேணும்
மரமென்ற நஞ்சாகாவைரமாகா
விழிமடவாள் இசையென்ற தாகாதப்பா
மிகுந்தசைவ நெறிமாதாயிவளாமென்றால்
வந்தவள்தான் தாயாச்சு அவளைப்பூசி
அண்டரண்டமறிவதற்கு பார்க்கங்கேளே.

முற்றிற்று.

தாசர் அச்சு இயந்திரசாலை, தாசர்புரம், தின்னனூர் R.S,

ஹரிதாசர்

# காலரா துளிமருந்து

என்றும், ஆங்கிலத்தில்

# CHLORO-SALINOL

என்றும் வெகு கீர்த்தி பெற்று சென்னையில் கணக்கற்றவர் காலரா வியாதியை ஜெயிக்க உதவிய மருந்தே இதுதான். இது வெளியூர்களில் இன்னும் தெரியாமல், வருடந்தோறும் அநேகர் உயிர் துறக்க நேரிடுகிறது. என்ன பரிதாபம்! இந்த நோட்டீஸ் கண்டவுடன் ஒரு புட்டி ஆர்டர் செய்து வீட்டில் கைகாவலுக்கு வைத்துக்கொண்டால். இந்த வியாதிக்கு ஒரு பயமும் கிடையாது. இதை அனுபவத்தில் அறியவும்.

பரோபகார ஊழியருக்கு விலை குறைத்து அனுப்பப்படும்.

ஒரு புட்டி விலை ரூ. 1—4—0

3 புட்டியானல் தபால் சார்ஜ் இனம்.

தாசர் சித்த வைத்தியசாலை,

தாசர்புரம், தின்னனூர் R. S.

# கக்குவானுக்கு

## ஹரிதாசர் மருந்து

மிகவும் கைகண்டது என்பது சென்னை முழுவதும் யாவரும் அறிந்த விஷயம்: மற்ற வெளியூர்களில் இவ்விஷயம் மறைந்திருப்பதால் இதை வெளியிட்டோம். சிங்கப்பூர் நண்பர் ஒருவர் எழுதுகிறார்:—

நான் இதுவரையில் கக்குவானுக்கு மருந்தே கிடையாது என்று எண்ணியிருந்தேன். என் பிள்ளைகள் இவ்வியாதியால் மிகவும் வருந்தியது. சில ஜெர்மன் மருந்துகள் வாங்கிக்கொடுத்தும் நிற்கவில்லை. அப்பொழுது சென்னையில் இருந்து வந்த ஒரு நண்பர், மதராஸில் கேள்விப்பட்ட ஹரிதாசர் கக்குவான் மருந்தை வாங்கிக்கொடுத்துப் பாருங்கள் என்றார். உடனே வி.பி. யில் ஒன்றுக்கு எழுதினேன். 2-வாரத்தில் மருந்து வந்தது: என் பிள்ளைகளுக்குக் கொடுத்தேன்: மூன்று நாளில் குழந்தைகள் சுகமடைந்தார்கள். என்ன ஆச்சரியம்! என்ன சந்தோஷம்! இதை உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று உடனே எழுதினேன்." இப்படி அநேகக் கடிதங்களுண்டு.

1 புட்டி விலை ரூ. 1—0—0. தபால் செலவு 5 அணா, மூன்று புட்டி ரூ. 3—0—0 தபால் செலவு இனாம்.

**தாசர் சித்த வைத்தியசாலை,**

**தாசர்புரம், திண்ணனூர் R.S.**